DEEPAM .news

தீபம்

கனடாப் பதிப்பு

தமிழின் முதல்தர
• வார இதழ் • தீபம் 45 • 05.10.2016

முஸ்லிம் மக்களின் சமத்துவமான அரசியல் இருப்பை மறுதலிப்பது ஏன்? 06

'சீக்கா' வைரஸ் நோயும் அதன் ஆபத்தான விளைவுகளும்! 11

"எந்தப் படமானாலும் அதை இலாபம் தரக்கூடிய வகையில் தயாரிக்க முடியும்!" - இயக்குனர் செந்தில் வினு 16



கனேடிய மண்ணில் தைத் திங்கள் தமிழ் மரபுத் திங்களாக அறிவிப்பு!

அனைத்துக் கட்சிகளதும் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் தீர்மானம்!

தமிழர் மரபு:
‘யாதும் ஊரே யாவரும் கேளிர்!’

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று கூறி, வருடத்தின் முதற் திங்களான தைத்திங் களின் முதல் நாளை, பெருமளவில் விவசாயத்தையே நம்பியிருந்த தமிழ் மக்கள், அறுவடைக்குப் பின்னாக, தமது வாழ்வுக்கு வளம் சேர்த்த ஆதவனுக்கு விழாவெடுக்கும் தைப்பொங்கலுடன் ஆரம்பிக்கும் மரபு காலம் காலமாக இருந்து வந்திருக்கிறது.

அந்த மரபை பேணவும், அதன் நினைவுகளோடு, தமிழர் கலை, பண்பாடு, தொழில் மற்றும் வாழ்வியலனுபவங்களை, மரபின் தொடர்ச்சியை கொண்டாடுவதும் என்பது , நாடுவிட்டுப் புலம்பெயர்ந்து, விவசாயத்திலிருந்து விடுபட்டு வாழும் ஒரு புத்துலகில் கூடக் கொண்டாட விரும்புவது, தாம் ஒரு தனித்துவமான மக்கள் தொகுதியாக வாழ விரும்பும் ஒரு இனமென்ற வகையில், தமது மரபே தம்மை தனித்துவமாக வாழவைக்கும் என்று நம்புவதை மட்டுமல்ல, அந்த மரபின் செழுமையையும், பலத்தையும் கூட வெளிப்படுத்துவதாகும். அந்த வகையில், கனேடிய மண்ணில், தைத்திங்களை தமிழர் மரபுத் திங்களாக கனேடிய பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்யவைத்த நிகழ்வானது, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு பெருமையையும் உற்சாகத்தையும் தருவதாகும்.

கனடாவில் பல்கலாசாரம் என்பது, அங்கு வாழும் அனைத்து மக்கள் சமூகங்களும் சமத்துவமாக தத்தமது இன, மத, கலாசார பின்னணியுடன் தமது தனித்துவத்தைப் பேணியபடி, ஐக்கியமாக வாழ்வதற்கு வழிவகுத்துள்ள, அனைவரது உள்ளத்திலும் நிறைந்துள்ள ஒரு கோட்பாடாகவே நிலவுகிறது. இன்றைய பிரதமர் ஜஸ்ரிட் ரூடோ அவர்களின் தந்தையாரான பியர் ரூடோ வின் 19701980 வரையான ஆட்சிக்காலத்தில், பல்கலாசாரத்தை உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தது. குடிவரவை ஊக்குவிப்பதற்கான சமூக முக்கியத்துவத்தை வழங்கும் ஒரு கோட்பாடாக இந்த பல் கலாசாரம் என்ற கோட்பாடு அவர்களால் பயன்படுத்தப்பட்டது. 1960களில் ஆங்கில பிரெஞ்சு கலாசாரங்கள் மட்டுமே கணக்கிலெடுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இருமொழி இரு கலாசாரம் (Bilingualism and Biculturalism என்ற கருத்தியல், கனடிய பூர்வகுடிகள் மற்றும், புலம்பெயர்ந்து வந்த ஏனைய சமூகக் குழுக்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கவில்லை என்பதால், இந்த பல்கலாசார கோட்பாட்டை பியர் ரூடோ அறிமுகப்படுத்தினார்.

இந்தக் கோட்பாட்டை ஒரு சமூகவியல் கோட்பாடாகவும், அரசியற் கோட்பாடாகவும் கனடா இன்று பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு பல்கலாசார உடனிருப்புக்களால் உருவாகியுள்ள இனங்களுக்கிடையிலான உறவு, ஒரு புதிய கனடிய கலாசாரமாக, பண்பாடாக இன்று பரிணமித்துள்ளது. 1988 இல் கொண்டுவரப்பட்ட கனடிய பல்கலாசார சட்டம், Canadian Charter of Rights and Freedoms இன் 27வது பிரிவு, 1991 இல் கொண்டுவரப்பட்ட The Broadcasting Act என்பவை இன்று கனடாவில் பல்கலாசரம் ஒரு பண்பாடாக வளர்ந்திருப்பதற்குக் காரணமான சட்டங்கள் என்று சொல்லலாம். அந்த வகையில், தமிழர் பாரம்பரியமும், அவர்தம் பண்பாடும் கலாசாரமும் கனடிய பண்பாட்டுக்கு அணிசேர்ப்பவையாக அமைந்துள்ளன பாராளுமன்றத்தில் இதை ஒரு தீர்மானமாக கொண்டு வந்து அதை ஒரு அரச பிரகடனமாக அறிவிப்பதற்கு பல தனி நபர்களும், அமைப்புக்களும், அரசியலாளர்களும் பங்களித்திருப்பதாக, இந்த தீர்மானத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்து அதற்காக அயராது உழைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவிக்கின்றார். அவர் முழுத் தமிழ் சமூகத்தினதும் அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவராவார். அவருக்கு தீபத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

தமிழ் மரபுத் திங்களாக தைத் திங்களை பாராளுமன்றில் பிரகடனம் செய்வதுடன் இந்தப் பணி நின்றுவிடக்கூடாது. எமது மரபின் வரலாறு, மரபின் அடையாளங்கள், மரபின் பண்பாட்டு வடிவங்கள், மரபின் கலைகள், இலக்கியங்கள் மற்றும் சமூக பொருளாதார உற்பத்தி முறைகள் என்பன தொடர்பான ஆய்வுகள், ஆவணப்படுத்தல்கள், கட்ட்சியகங்களை உருவாக்குதல், அடுத்த தலைமுறைக்கு இவற்றை எடுத்துச் செல்லும் விதத்தில் இவை பற்றிய அறிவூட்டல் என்பவற்றை செய்ய , இந்த இடத்திலிருந்து நாம் தீவிரமாக இறங்க வேண்டும்,

தமிழர் பண்பாடு என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மதச்சார்பற்ற, அனைத்து கலாசாரப் போக்குகளையும் உள்ளிணைக்கும் பெருந்தன்மை வாய்ந்த மற்றெந்த பண்டைய மரபுக்கும் இல்லாத ' யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தது. பல்மொழி, பல்மத பல்கலாசார தன்மையை தன்னகத்தே அது அன்றே கொண்டிருந்தது. மதச்சார்பின்மை, அறிவியல், கடலோடி மேற்கொள்ளும் நாடுகடந்த வணிகம், புலப்பெயர்வு என்று பல சிறப்பான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது தமிழர் மரபு.

தமிழ் மொழியின் ஆழமும் வீச்சும் உலக மொழிகளில் முதன்மை இடத்தைக் கொண்டிருக்கும் அளவுக்கு வளர்ந்திருந்ததற்கு தமிழரின் இந்த வாழ்வுமுறை முக்கிய காரணமாகும். இந்த மரபின் தொடர்ச்சியை அதே சிறப்புடன் தொடர இந்த நிகழ்வை நாம் ஒரு தொடக்கப் புள்ளியாக நாம் கொள்ள வேண்டும்.

எம்மிடம் ஆவணப்படுத்தல் மரபு ஒன்று இருந்திருக்கவில்லை என்பதால், குரு சீட பரம்பரை மூலமாக கடத்தப்பட்டு வந்த பல அற்புதமான கலை பண்பாட்டு இலக்கிய செல்வங்களை நாம் இழந்துவிட்டோம், ஐரோப்பியர் வருகை இதற்கு பிரதான காரணமாக இருந்தது, பிறகு நாட்டில் மூன்று தசாப்தகாலமாக நடந்த யுத்தம் இவற்றில் எஞ்சியிருந்த இன்னமும் சிலவற்றை இல்லாமலாக்கி விட்டது. இனியும் அந்த நிலை தொடரக் கூடாது. எமது மரபும் அதன் செழுமையும் தொடர்ந்தும் வாழும் வகையில், அவை பேணப்படும் வகையில் அதற்கேற்ற நடவடிக்கைகளில் நாம் இறங்கவேண்டும். இதற்கான பணியில், உலகெங்கும் பரந்து வாழும் அறிஞர்களையும், ஆர்வலர்களையும் இணைத்து செயற்படத் தொடங்குவதற்கான ஆரம்பப் புள்ளியாக இந்த ஒக்ரோபர் 5ம் நாள் அமையட்டும்.


வாழ்க தமிழ்!. வாழ்க தமிழர் பாரம்பரியம்!

யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

2015 - 2016 புதிப்புரிமை தீபம் கனடா.
ஆக்கங்களின் கருத்துக்களுக்குப் படைத்தோரே பொறுப்பு. பத்திரிகையில் வெளியாகும் செய்திகள், ஆக்கங்கள், படங்கள் மற்றும் கருத்துக்கள் யாவும் தீபம் கனடாவுக்குச் சொந்தமானவை. படியெடுத்தல் மீள்பதிப்புச் செய்தல் மற்றும் தழுவுதலுக்கு எழுத்து வாயிலான அனுமதி பெற வேண்டும்.

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news editor@deepam.news www.deepam.news

கனேடிய மண்ணில் தைத் திங்கள் தமிழ் மரபுத் திங்களாக அறிவிப்பு!
அனைத்துக் கட்சிகளதும் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் தீர்மானம்!




தை மாதத்தை தமிழர் மரபுத் திங்களாக அறிவிக்குமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி அவர்களால் கடந்த மே மாதம் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை மீதான விவாதங்கள் நடபெற்று, இன்று (ஒக்ரோபர் 5) வாக்கெடுப்பின் பின் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுகின்றது. கனடியத் தமிழ் மக்களின் வரலாற்றில். இந்தச் சம்பவமானது ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை. இது கனடாவில் மிகக் குறுகிய கால வரலாற்றைக் கொண்ட ஈழத் தமிழ் மக்கள் கனடிய மண்ணில் ஆற்றியுள்ள பங்களிப்புக்கு கிடைத்துள்ள ஒரு மாபெரும் வெற்றியென்றே சொல்லவேண்டும்.

பாராளுமன்றத்தில், இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில், கலந்துகொண்டு இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக உரை ஆற்றிய லிபரல் கட்சி பாராளுமன்றஉறுப்பினர்களான சல்மா ஷாஹித், றாஜ் க்ரேவால், கொன்சர்வேற்றிவ் கட்சி உறுப்பினர்களான தீபக் ஒப்ரய், கிறனெற் ஜென்னிஸ் மற்றும்,புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஜென்னி க்வான் ஆகியோர் ஈழத்தமிழர்களின் கனேடிய மண்ணிலான சாதனைகளைப் பற்றியும்,தமிழர்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட கலை,கலாசார பண்பாட்டின் சிறப்பினையும், அறுவடையின் பின்னர் ஆதவனுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் கொண்டாடப்படும் தைப் பொங்கல் விழா பற்றியும் விதந்து பேசியிருந்தனர்.

வன்கூவரை சேர்ந்த புதிய ஜனநாயக கட்சி உறுப்பினர் ஜென்னி க்வான் தனது உரையின்போது, தமிழ் மொழியின் தொன்மை பற்றியும், அதன் இலக்கியச் செழுமை பற்றியும், அது உலகின் மிகப் பழைய, செம்மொழிகளில் ஒன்றாக இருப்பது பற்றிக் குறிப்பிட்டதுடன், ஈழத்தமிழர்கள் கனடாவின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணியையும் பாராட்டினார்.

ஈழத் தமிழர்கள் மத்தியிலிருந்து வந்து, கனடிய புனைவிலக்கிய உலகிற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ள ஷியாம் செல்வத்துரை, கனடிய Nuclear Safety commission இல் இணைந்து, கனடாவின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அளப்பரும் சேவையாற்றிவரும் அணுப் பௌதிகவியல் விஞ்ஞானியான கலாநிதி இலகுப்பிள்ளை, இங்கு வந்து முதன் முதலாக கனடிய அரசாங்க அமைப்புக்களில் ஒன்றான மார்க்கம் மாநகரசபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதியாகி, மக்களுக்காக சேவையாற்றிவரும் லோகன் கணபதி ஆகியோர் ஈழத்தமிழர் கனடாவுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்கு மூன்று உதாரணங்கள் என்று தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ரில் தனது பிரேரணைக்கு ஆதரவாக உரையாற்றிவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தனது உரையின் போது

" கடந்த ஜூலை மாதம் நான் இலங்கைக்கு சென்றிருந்தபோது, கடந்த 26 வருட கால யுத்தத்தில் நடந்திருக்கும் எண்ணற்ற அழிவுகளை என்னால் காணக்கூடியதாக இருந்தது. நான் பிறந்த இந்த நாட்டில், இன்னமும் தமிழ் மக்கள் அமைதியாகவும், சமத்துவமாகவும், பாதுகாப்புடனும் வாழ்வது கடினமாகவே இருக்கிறது. தனித்துவம் வாய்ந்த தமிழ் மொழி, தமிழ் கலாசாரம், தமிழ் மக்களது பண்பாடு,அவர்களது நிலம் எவற்றையும் பாதுகாக்கக் கூடிய நிலையில் அந்த நாடு இல்லை. " என்று தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் "1983 இல் கனடா என்னையும் எனது குடும்பத்தையும் அகதிகளாக ஏற்றுக் கொண்டது. எண்ணற்ற உரிமைகளையும், சுதந்திரத்தையும், வாய்ப்புக்களையும் வழங்கும்நாடாக அது இருந்தது. இங்கு ஒருவரது வெற்றியோ தோல்வியோ அவர் யார்,எங்கிருந்து வந்தவர் என்பதை வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை."

"நாங்கள் கனடியர்களாகவும், தமிழ் கனடியர்களாகவும் நீண்ட பயணத்தை மேற்கொண்டு வந்திருக்கிறோம்"

"இந்த இடத்தில், நான் பல தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும், இந்த நாளின் வெற்றிக்காக அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்காக நன்றி சொல்லவேண்டும். பல சமூகத் தலைவர்கள், நிறுவனங்கள், இந்த நாட்டிலுள்ள அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் தமிழ் மரபை பாதுகாக்க ஆற்றிவரும் பங்களிப்பின் காரணமாக நாம் இன்று தைத் திங்களை ஒவ்வொரு தை மாததிலும் நாடளாவிய ரீதியில் மரபுத் திங்களாக கொண்டாடும் நிலைக்கு வந்துள்ளோம்" என்று மேலும் தெரிவித்தார்"



“அரசியல் தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் சகல தரப்பினரது சம்மதமும் இருக்க வேண்டும்”

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியிடம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிப்பு!

“தமிழ் மக்களைப் பொறுத்த வரை, 13 ஆவது அரசியல் சாசன திருத்தம் ஒரு முழுமையான தீர்வல்ல. அது அரசியல் தீர்வுக்கான ஒரு ஆரம்பம் மட்டுமே. சிறுபான்மை மக்களுக்குள்ள அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

"இறுதியில், ஒரு சர்வசன வாக்கெடுப்பின் மூலம்,இறுதி அரசியல்தீர்வானதுஎல்லோரது அங்கீகாரத்தையும் பெற வேண்டியுள்ளதால், அந்த தீர்வைப் பொறுத்த வரையில் அடிப்படை விடயங்களில் எல்லோருடைய சம்மதமும் மிக அவசியம்."

இவ்வாறு TNA தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா.சம்பந்தன் அவர்கள் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி(NFGG) பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

NFGG இன் தலைமைத்துவ சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கடந்த 29.09.2016 அன்று இரா.சம்பந்தன் அவர்களின் கொழும்பு வதிவிடத்தில் இடம் பெற்ற இச்சந்திப்பில் NFGGயின் தவிசாளர் பொறியாலாளர் அப்துர் ரஹ்மான், அதன் பொதுச்செயலாளர் நஜா மொகமட், தலைமைத்துவ சபையின் தவிசாளர் சிராஜ் மஷ்ஹூர் மற்றும் அதன் தேசிய அமைப்பாளர் MBM பிர்தௌஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசியல் தீர்வு, புதிய அரசியலமைப்பு மற்றும் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாக விரிவாக ஆராயவும் விவாதிக்கவும் பட்டது.

சந்தேகங்களை வளர்ப்பதை விட, அதைப் பேசித் தீர்ப்பதே ஆரோக்கியமான அணுகுமுறையாகும். அந்த வகையில், தமிழ்முஸ்லிம் சமூகங்களிடையே, பரஸ்பர சந்தேகங்கள் அதிகரித்து வரும் நிலையில் இடம்பெற்றுள்ள இந்த சந்திப்பு முக்கியமானது.

இந்த சந்திப்பில், சிறுபான்மை மக்களின் பொதுப் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்ட வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:

"இதற்குப் பிறகு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை உருவாகக் கூடிய நிலமை மீண்டும் எப்போது வரும் என்று தெரியாது.

"தமிழ் மக்களைப் பொறுத்தவரை, 13 ஆவது அரசியல் சாசன திருத்தம் ஒரு முழுமையான தீர்வல்ல. அது அரசியல் தீர்வுக்கான ஒரு ஆரம்பம் மட்டுமே.

"சிறுபான்மை மக்களுக்குள்ள அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இதை இழந்தால், பெரும் பின்னடைவாக இருக்கும்.

"இறுதியில், ஒரு சர்வசன வாக்கெடுப்பின் மூலம், அரசியல் தீர்வானது எல்லோரது அங்கீகாரத்தையும் பெற வேண்டியுள்ளதால் , அந்த தீர்வைப் பொறுத்த வகையில் அடிப்படை விடயங்களில் எல்லோருடைய சம்மதமும் மிக அவசியம்."

NFGG
යහපාලන සඳහා වූ ජාතික පෙරමුණ
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
National Front for Good Governance

வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக, தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிலவும் ஆழமான கருத்து வேறுபாடு குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

"வடக்கு கிழக்கு இணைப்பு, அது தமிழ் பேசும் மக்களது தனியான பிரதேசம் என்பது எங்களது நீண்டகாலக் கோரிக்கை.

"1957 இல் பண்டாரநாயக்கா அதற்கு உடன்பட்டிருந்தார். பண்டா செல்வா ஒப்பந்தத்தில் அது எழுத்து மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக அது இணைக்கப்பட்டது.

"பின்னர் ஜே.வீ.பி. தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டது. இணைப்பின்போதான ஒரு நடைமுறைத் தவறையே (Procedural Flaw) இதற்குக் காரணமாகக் காட்டினார்கள்.

"வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கை" என அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த சந்தர்ப்பத்தில், கிழக்கு முஸ்லிம்களது நிலைப்பாடு குறித்து NFGGயால் விரிவான விளக்கமளிக்கப்பட்டது.

"1987க்குப் பின்னர் இவ்விணைப்பு ஏற்படுத்தப்பட்டபோது, அது குறித்த எதிர்கால அச்சமும் சந்தேகமும் மட்டுமே இருந்தது.

"ஆனால், இப்போது அந்த அச்சத்துடன், கடந்த கால கசப்பான அனுபவங்களும் சேர்ந்து நிலமையை மேலும் சிக்கலாக்கி விட்டன.

"குறிப்பாக 1990 இன் பயங்கர அனுபவங்கள், ஆழமான வடுவாக முஸ்லிம்களின் மனதில் பதிந்துள்ளன.

"எனவே வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே அரசியல் தீர்வு விடயம் அணுகப்பட வேண்டும் .

"எல்லோரது இணக்கத்துடன்தான்,இந்த விடயம் குறித்த இறுதி நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்" என NFGG வலியுறுத்தியது.

இதற்குப் பதிலளித்த சம்பந்தன் ஐயா, கீழ்வரும் கருத்துகளை முன்வைத்தார்.

"எல்லாவற்றையும் சமரசத்தின் அடிப்படையில், நாம் பேசித் தீர்க்க முடியுமாக இருந்தால் அதுதான் மிகச் சிறந்தது.

"இந்தக் கருமங்கள் இன்றைக்கோ நாளைக்கோ முடியப் போவதில்லை. தமிழர்களும் முஸ்லிம்களுமாகிய நாங்கள், பரம்பரை பரம்பரையாக இங்குதான் வாழப் போகிறோம்.

"ஆனபடியால், எங்களுக்கு மத்தியில் சில சமரசங்கள் தேவை. நாங்கள் பேசித்தான் ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

"சிங்களவர்களுக்குமாத்திரம்திருப்தியான தீர்வு என்றோ, தமிழர்களுக்கு மாத்திரம் திருப்தியான தீர்வு என்றோ, முஸ்லிம்களுக்கு மாத்திரம் திருப்தியான தீர்வு என்றோ ஒரு தீர்வு வர முடியாது.

"இறுதித் தீர்வு எல்லோருக்கும் திருப்தியளிப்பதாக இருக்க வேண்டும்." இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவாடல்களும் (Engagement) உரையாடல்களும் (Dialogue), இதற்கு மிகவும் அவசியம் என்பதனை இதன் போது NFGG பிரதிநிதிகளினால் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையாக,நேரடி மக்கள் சந்திப்புகளை ஏற்படுத்த NFGG தயார் எனவும், அவற்றில் கலந்து கொள்ளுமாறும் TNA தலைவருக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது.

அவற்றில் கலந்து கொள்ள இரா.சம்பந்தன் அவர்கள் இணக்கமும் தெரிவித்தார்.

"கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தரப்பும் தமிழ்த் தரப்பும் இணைந்து, ஆட்சியில் பங்காளர்களாக தொடர்ந்து செயற்படுவது நல்ல அறிகுறியே.

"எனினும் ஆட்சியில் பங்காளிகளாக இருப்பது போலவே, இரு தரப்பு மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் பங்காளிகளாக இருக்க வேணடும்" என NFGG வலியுறுத்தியது.

தேசிய நலன் சார்ந்த விடயங்களில் எதிர்க் கட்சித் தலைவரின் பணிகள் குறித்தும் தமது அவதானங்களையும் எதிர்பார்ப்புகளையும் இசந்திப்பின் போது NFGG முன்வைத்தது.

நிலவும்இன்றைய சூழலில் இடம்பெற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக இது அமைந்திருந்தது.

– சிராஜ் மன்சூர்

ஈழச் செய்திகள்



எழுக தமிழ் பேரணிக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் எதிராக கண்டன ஊர்வலம்!

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பல தென்னிலங்கைச் சிங்கள அமைப்புக்களும் பல சிங்களத் தலைவர்களும் சில தமிழ் தலைவர்களும் பலத்த கண்டனங்களைத் தெரிவித்து வருகின்ற நிலையில், எழுக தமிழ் எழுச்சிப் பேரிணிக்கு கண்டனம் தெரிவித்தும்வடமாகாண முதலமைச்சருக்கு எதிராகவும் 'வடக்கை காத்து நாட்டை காக்கும் தேசிய இயக்கம் வன்னி' என்னும் அமைப்பு, வவுனியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றது.

பொதுபலசேனாவுடன் இராவணபலய, சிங்கள ராவய, சிங்களே பலமுலு எனச் சில சிங்கள அமைப்புக்கள் இணைந்து உருவாக்கிய 'வடக்கை காத்து நாட்டை காக்கும் தேசிய இயக்கம் வன்னி'என்னும் அமைப்பினால், பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞான சாரதேரரின் தலைமையில் மேற்கொள்ளப் பட்ட இக்கண்டனப் பேரணி, ஹொரவப்பொத்தானை வீதியில்ஆரம்பித்து மாவட்டச் செயலகம் வரை நடைபெற்றது. ஊர்வல முடிவில் ஆர்ப்பாட்டக்காரர்கள், கி 9 பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுதப்பட்ட மகஜரை வவுனியா அரசாங்க அதிபரிம்கையளித்தனர்.

கண்டனப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய கலகொட அத்தே ஞானசார தேரர், 'இன்றுவரை கொழும்பைத் தனது வசிப்பிடமாக வைத்துக் கொண்டிருக்கின்ற விக்கினேஸ்வரன்,இனவாதச் செயற் பாகளை முன்னெடுப்பது மட்டுமல் லாமல், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதி யில்வாழ்கின்ற எமது சகோதரர்களான தமிழ் மக்களின் மனங்களில் இனவாத நச்சுத் தன்மையை ஊட்டிவருகின்றார்.' எனத் தெரிவித்தார். முஸ்லிம்களுக்கெதிரான தனது இனவாத, வன்முறை அச்சுறுத்தல் காரணமாகவும் நீதிமன்ற அவமதிப்பு காரணமாகவும் கைது செய்யப்பட்ட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் என்பது தெரிந்ததே.

ஆட்கொணர்வு வழக்கை நிறைவு செய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ஆட்கொணர்வு வழக்கைநிறைவுசெய்யுமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறார், இவ்வழக்கில் இராணுவம் சார்பில்ஆஜரான சட்டத்தரணி. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் உள்ளிட்ட 11பேர் தாக்கல் செய்திருந்த ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணை விசாரணைக்குளடுக்கப்பட்ட போதே, இராணுவம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.



இவ்வழக்கில், இறுதி யுத்தத்தின் போது சரணடைந்தவர்கள் தொடர்பான அறிக் கையை வழங்குமாறுநீதிவான் கோரியிருந்த நிலையில், கடந்த வழக்கு விசாரணையின் போது அது தொடர்பான அறிக்கை ஒன்று 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அறிக்கை, 2009 ஆம் ஆண்டு மே மாதம் சரணடைந்தவர்களின் பட்டியல்அல்லவெனவும், புனர்வாழ்வு நாயகத்தினால் பல வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கை எனவும் நீரூபிக்கப்பட்டது. இந்த நிலையில் இராணுவம்சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தங்களிடம் வேறு சாட்சியங்கள் இல்லை எனத் தெரிவித்ததுடன் அதனால் வழக்கை நிறைவு செய்ய வேண்டுனெவும் கேட்டுக் கொண்டார்.இதனையடுத்து நீதிவான் எஸ்.எம்.சம்சுதீனும், இந்தவிடயத்தைஎழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறுஉத்தரவிட்டுள்ளார்.

நூல் ஆய்வரங்கில் பார்வையாளர்கள் ஆத்திரமடைந்து குழப்பம் விளைவிப்பு!

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நூல் ஆய்வரங்கில் பார்வையாளர்கள் ஆத்தரமடைந்து குழப்பம் விளைவித்ததுடன், சுமந்திரன் இடைநடுவில் வெளியேற வேண்டியேற்பட்டது. தவராசா மற்றும் ஆனந்தசங்கரியினது உரைகளின் போது கடும்எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய 'இலங்கை அரசியல் யாப்பு' எனும் நூல் தொடர்பான ஆய்வரங்கு யாழ். நாச்சிமார் கோவிலடியிலுள்ள மண்ட பத்தில் நடைபெற்றபோது இந்த 'எதிர்பாராச்சம்பவம்' நடைபெற்றுள்ளது.

நூல் ஆய்வரையில் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் தமிழ் மக்கள்பேரவையையும் தாக்கிப் பேசியதுடன், எழுக தமிழ் பேரணியையும் அங்கு வெளியிடப்பட்டபிரகடனத்தையும் கண்டித்துப் பேசியதையடுத்து, பார்வை யாளர்கள் மத்தியில் குழப்பமேற்பட்டது. சில பார்வையாளர்கள் எழுந்து நின்று சுமந்திரன கடுமையாகத் தாக்கிப் பேசத் தொடங்கினர்.

சுமந்திரனின் உரையின் பின்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் உரை யாற்றும் போது சுமந்திரனின் குற்றச் சாட்டுக்களுக்கு விளக்கமளித்தபேசினார்.

உரையின் பின்னர், சுமந்திரன் ஆவணம் ஒன்றினைக் காண்பித்து, கஜேந்திர குமார்பொன்னம்பலத்துடன் உரையாடிய போது,பார்வையாளர்கள் மத்தியில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டது.பார்வையாளர்கள் கூச்சலிடவேநிகழ்வுமுடியமுன்பேசுமந்திரன் வெளியேறிச் செல்லவேண்டியேற்பட்டது. சுமந்திரனின் பின்னால் அவரை திட்டிய படியே பார்வையாளர்கள் பலர்சென்றத னால், மெய்ப்பாதுகாவலர்கள் அவரை வேகமாக அழைத்துச் சென்றதுடன், வடமகாண சபைஉறுப்பினர் ஒருவருடைய வாகனத்தில் அவரை ஏற்றி செல்ல வேண்டியேற்பட்டது.

இதேவேளை, நூலாய்வுரையில் வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோர் உரையாற்றும் போதும்சபையிலிருந்தவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு குழப்பம் விளைவித்ததையும் காணமுடிந்தது.

பௌத்த மக்களும் ஏனைய சிறுபான்மையினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு கிடைக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

தற்போது புரிந்துணர்வு அரசொன்று ஆட்சி அமைத்துள்ள நிலையில், வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மொழி பேசும் ஒரு கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும் போது,எமக்கு முக்கியஎதிர்பார்ப்பு ஒன்று உள்ளது. அது பௌத்த மக்களும் ஏனைய சிறுபான்மையினரும் ஏற்றுக்கொள் ளும் அல்லது திருப்தி அளிக்கும் ஒரு தீர்வு கடைக்கும் என்றே எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

கட்டுகஸ்தோட்டையில் இடம் பெற்ற ஊடகவியலாளர்களுக்கான செயலமர் வில்உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர் தனதுரையில், இம்முறை உருவாகி யிருக்கின்ற இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்தஅரசாங்கத்தை, அதிலும் குறிப்பாக இந்தநாட்டின் சிறுபான்மை இனங்கள் குறித்த நேர்மையான அணுகுமுறையைக் கொண்ட இரண்டு தேசியத் தலைமைகளும் அதாவது ஜனாதிபதியும் பிரதமரும்சேர்ந்து நடத்தி வருகின்ற இந்த கூட்டு அரசாங்கம் மற்றும் அவற்றுடன் சேர்ந்து சிறுபான்மைக் கட்சிகள் அதற்கு ஆதரரைவ வழங்கிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில், வழமைக்கு மாற்றமானபாரதூரமான விட்டுக்கொடுப்புகள் நடந்து விடுமென்ற ஒரு பாரிய அச்சத்தை ஏற்படுத்த முயன்றுவருகின்றார்கள்.



முஸ்லிம்கள் மத்தியிலும் கூட, முஸ்லிம் களின் அங்கீகாரம் இல்லாமல் வடகிழக்கு இணைக்கப்பட்டுவிடலாம் என்ற விஷயம் அதிலும் அதற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஏற்கனவே சம்மதம் தெரிவித்துவிட்டது என்ற பாணியில் பேசப்பட்டு வருகின்ற விடயம் என்பவற்றில் எந்த உண்மையும்கிடையாது எனவும் தெரிவித்திருக்கிறார் ரவூப் ஹக்கீம்.

அத்துடன், ஒரு சிலர் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும் எனக்கூறித்திரி கின்றனர். அப்படி ஒன்றைச் செய்வதாயின் சிலவேளைகளில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டி வரும். சர்வஜனவாக்கெடுப்பு என்றால் முழு நாட்டு மக்களினதும் பெரும்பான்மை அபிப்பிராயத்தை கேட்டறி வதாகஇருக்கும். இதனை ஒரு தனி நபரினால் நிறைவேற்ற முடியாது. அதே போல உயர்நீதி மன்றம் சென்றுசில விடயங் களுக்கு வியாக்கியானம் கேட்க வேண்டும். அதேபோல எவரது உரிமைகளாவது மீறப்படுமிடத்து நீதி மன்றத் தடை உத்தரவுகளையும் பெற முயடிம். அது மட்டுமல்லாமல்பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற வேண்டும். நினைத்த விதத்தில்மூன்றில் இரண்டுபெரும்பான்மையைபெறமுயடிலீது. சிறுபான்மைக் கட்சிகள் மட்டும் நினைத்தமாத்திரத்தில் அது நடந்து விடாது எனத் தெரிவித்திருப்பதுடன், நாட்டில் இறைமை சம்பந்தமானவிஷயத்தில் எந்தவித மான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. "இந்த நாடு பிரிக்கப்பட முடியாதது என்பதில் எல்லோரும் ஒத்த கருத்துடன் இருக்கின்றோம்" எனவும் தெரிவித்திருக்கின் றார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

பிரகல் திரு மாகாண இடைத்தேர்தலில் லிபரல் கட்சி சார்பாக போட்டியிட்டவர், ஒன்டாறியோ லிப்ரல் கட்சியின் ஒரு உபதலைவர் பதவியில் தொண்டாற்றுபவர், மற்றும் யோர்க் பிராந்திய அரசின் போக்குவரத்துப் பிரிவின் மூத்த கொள்கை வகுப்பாளராக பணி புரிபவர்.



இரண்டு தமிழர்கள் போட்டியிட்டது தோல்வியல்ல

வாக்களிக்காதவர்களின் அக்கறையின்மையே தோல்வி!

றொரன்றோ மாநகரில் தமிழர்கள் அதிகமாக வாழும் ஸ்காபுறோரூச் ரிவர் தொகுதியில் ஒன்டாறியோ மாகாண சபைக்கான உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான இடைத்தேர்தல் செப்டெம்பர் முதலாம் திகதி நடைபெற்று முடிந்தது. அதில் 2 தமிழர்கள் உட்பட 9 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். ஆளும் கட்சியான லிபரல் கட்சி சார்பாக நானும் போட்டியில் நின்று இரண்டாம் இடத்தைப் பெற்றவன் என்ற வகையில் ஒரு சில கருத்துக்களைப் பகிர விரும்புகின்றேன்.

முதலில் எனக்கு ஆதரவளித்த அனைத்து தொண்டர்கள், வாக்காளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது கட்சி சார்பாக மட்டுமல்ல, பெரும்பான்மைக் கட்சிகள் சார்பாகப் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர், மற்றும் தன்னார்வுத் தொண்டர்கள் அனைவரும் மிகக் கடினமாக உழைத்ததைக் காணக் கூடியதாக இருந்தது. மேலும் இதில் மற்றுமொரு சிறப்பம்சம் என்னவென்றால், அனைவரும் சிறந்த முறையில், தனிப்பட்ட தாக்குதல்கள் எதுவுமின்றித் தத்தம் பரப்புரைகளை நடாத்தியதும் காணக்கூடியதாக இருந்தது. தேர்தல் முடிவில் எனது உரையில் நான் சொன்னது போல, 'நீங்கள் எந்த கட்சியிலிருந்தாலும் சரி, இந்தத் தேர்தலில் நீங்கள் உங்களை எந்தவகையில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தாலும் அது நாம் கட்டிக் காக்கும் ஜனநாயகத்திற்கான வெற்றியே!'

இவை ஒருபுறமிருக்க, வளர்ந்துவரும் எமது கனடிய தமிழ் சமூகத்தில் அரசியல் பலம் ஒரு முக்கிய தேவையாக அமைக்கின்றது. அந்தவகையில், இந்தத் தேர்தலில் ஒரு தமிழர் வென்றிருந்தாரேயானால் அது எமது சமூகத்திற்குப் பெரும் பயனாக இருந்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஒவ்வொரு பெரும்பான்மைக் கட்சிகளிலும் தமிழ் வேட்பாளர்கள் தம் இருப்பைப் பிரதிபலிக்கவேண்டும் என்பது எனது விருப்பம். இதுவே எமது சமூகத்திற்கு பயன் தரும் வளர்ச்சியாக அமையும் அந்த வளர்ச்சிப் பாதையில், ஒரு தொகுதியில் ஒன்றிற்கு மேற்பட்ட தமிழர்கள் போட்டியிட்டால் அதனையும் வரவேற்க வேண்டிய ஒரு விடயமாகத்தான் நான் பார்க்கிறேன். பலவின சமூக வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகளையும் தேவைகளையும் பிரதிபலிக்கும் வண்ணமும், சமூகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டும், தமது திறமையூடாக எமது தமிழ் சமூகத்திற்குப் பெருமை சேர்க்கும் வண்ணமும் ஒரு வேட்பாளர் திகழ்வாரென்றால் அவரது வரவு வரவேற்கப்படவேண்டும்.

என்னுடன் கருத்துப் பரிமாறும் பலரும், "ஒருவர் போட்டியிட்டால் வென்றிருக்கலாம்" எனக் கூறுவார்கள். உண்மைதான்! ஆனாலும் அது 'யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது' என்பது என்னுடைய கருத்து. சமூக வளர்ச்சிக்கும் அது ஒவ்வாதது. ஒருவர் மட்டும் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு, 'வாக்களிக்கக்கூடியவர்கள் ஏன் வாக்களிக்கவில்லை' என்பதைத்தான் நாம் இப்போது கருத்திலெடுக்க வேண்டும்.

நடந்து முடிந்த இடைத்தேர்தலில் 28 விழுக்காடுகளுக்குக் குறைவாகவே வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். மீதி வாக்காளர்கள் ஏன் வாக்களிக்கவில்லை? வாக்களிப்பதற்கு பல வழிகள் இருந்தபோதும், வாக்காளர்களின் அக்கறையின்மைதான் ஒரு தமிழ் வேட்பாளர் வெற்றி பெறாமல் போனதற்கு மூலகாரணமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. இதை ஒரு பாடமாக வைத்து, எதிர்வரும் காலங்களில் எந்த மட்டத்தில் தேர்தல் நடந்தாலும், நாம் ஒவ்வொரு வரும் வாக்களிப்பதை எமது குடியுரிமையின் கடமையாக எடுத்து, அனைவரையும் வாக்களிக்க வைக்க வேண்டியது அவசியமாக அமைகின்றது.

'ஒரு தொகுதியில் எத்தனை தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள்' என்பது எதிர்வரும்காலங்களில் அவசியமற்றதொருவிவாதமாகும். இந்த விவாதம் வாக்காளர்களின் அரசியல் அறிவை ஒரு வகையில் குறைத்து எடைபோடுவதாகக்கூட அமைகின்றது.

ஆயினும், 'வாக்காளர்கள் ஒவ்வொருவரும் வாக்களிப்பது' மிக முக்கியம். அதிக அளவு வாக்குகள் பதிவு செய்யப்படும்போது, சிறந்த கொள்கைகளை முன்வைக்கும், செயலாற்றலுடையதொரு வேட்பாளர் தெரிவு செய்யப்படும்வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றது. இல்லையேல், நடந்து முடிந்த தேர்தலில் நடந்தது போல, அனைத்து வாக்காளர்கள் சார்பில் வெற்றி பெற்றவரை 10 சதவீத அளவிலான வாக்காளர் மட்டுமே தெரிவு செய்ததாக முடியும்.

வாசகர்கள் அனைவரிடமும் எனது அனுபவமூடாக நான் கேட்டுக்கொள்வது ஒன்று மட்டுமே: உங்களுக்கு வாக்குரிமை இருந்தால், தயவு செய்து வாக்களிப்பதை ஒரு கடமையாகக் கருதி, வேட்பாளர்களின் திறமை, கொள்கைகளை நன்கு அறிந்து, ஆராய்ந்து உங்கள் வாக்கைப் பதிவு செய்யுங்கள். எத்தனை தமிழர்கள் போட்டியிடுகின்றனர் என்பது முக்கியமல்ல. எத்தனை வக்காளர்கள் தமது வாக்கைப் பதிவு செய்கின்றனர் என்பதை வைத்தே ஒரு சிறந்த வேட்பாளரின் வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது. பிரகல் திரு மாகாண இடைத்தேர்தலில் லிபரல் கட்சி சார்பாக போட்டியிட்டவர், ஒன்டாறியோ லிப்ரல் கட்சியின் ஒரு உபதலைவர் பதவியில் தொண்டாற்றுபவர், மற்றும் யோர்க் பிராந்திய அரசின் போக்குவரத்துப் பிரிவின் மூத்த கொள்கை வகுப்பாளராக பணி புரிபவர்.

- பிரகல் திரு

முஸ்லிம் மக்களின் சமத்துவமான அரசியல் இருப்பை மறுதலிப்பது ஏன்?

கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகளின் மன அமைப்பு (Mindset),

கருத்தியல் சட்டகம் (Ideological Framework) குறித்த அலசல்



தமிழ் மக்களின் அகப் பன்மைத்துவம் தமிழ் மக்கள் உள்ளார்ந்து அக ரீதியாக பல உப குழுக்கள், உப கலாச்சாரங்கள், வேறுபட்ட பண்புகள், போக்குகள் கொண்ட அகப் பன்மைத்துவம் நிறைந்தவர்கள்.

இது அவர்களுக்கு மட்டுமல்ல, இந்நாட்டிலுள்ள ஏனைய எல்லா இனத்தவர்களுக்கும் பொருந்தும்.

தமிழ் மக்களுள் கடும்போக்கு வறட்டு தேசியவாதிகள், மிதமான போக்குடைய தேசியவாதிகள், முஸ்லிம்களையும் மலையகத் தமிழர்களையும் சமத்துவமான சக தேசியங்களாக அங்கீகரிப்பவர்கள், தேசியவாதத்தை அடியோடு எதிர்ப்பவர்கள், இடதுசாரிகள், வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகள் கொண்டோர் என, பல தரப்பட்டவர் உள்ளனர் என்ற அடிப்படை உண்மையை மனங் கொண்டே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

இக்கட்டுரையின் நோக்கம்

கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகள் குறித்தே இதில் கவனம் செலுத்தப்படுகிறது. அண்மைக் காலமாக இந்தப் போக்கைப் பிரதிபலிப்போரின் அரசியல் செயற்பாடுகள் தூக்கலாக முன்னிறுத்தப்பட்டு வருகின்றன. இது ஆரோக்கியமானதல்ல.

இந்தத் தீவிரப் போக்கை மறுதலித்து, பல தரப்பட்ட மக்கள் மத்தியில் உரையாடலை ஊக்குவித்து, சந்தேகங்களைக் களைந்து, புரிந்துணர்வை வளர்ப்பதே இதன் முக்கிய இலக்கு.

'மக்களுக்குப்' பின்னேயுள்ள அரசியல்

இந்தக் கட்டுரையில் மக்கள் என்ற சொல் குறிப்பான அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகின்றது. அந்த சொல்லுக்குப் பின்னேயுள்ள அரசியல் அர்த்தங்களை முதலில் தெளிவுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் கட்டுரையின் மைய வாதங்களை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளலாம்.

சாதாரண மொழி வழக்கில் உள்ள 'மக்கள்' என்ற பிரயோகத்திற்கும், அரசியல் ரீதியாகப் பயன்படுத்தப்படும் 'மக்கள்' என்ற பிரயோகத்திற்கும் இடையே நுட்பமான பொருள் வேறுபாடு உள்ளது. மக்கள் தான் அரசியல் அதிகாரத்திற்கு உரித்துடையவர்கள். இதுதான் அந்த வேறுபாடு.

'மக்கள்' என்ற பிரயோகம் அரசியல் ரீதியாக அர்த்தம் மிக்கது. ஆங்கிலத்தில் people என்ற சொல் இதற்கு சமமாக பயன்பாட்டில் உள்ளது. இதன் பன்மைச் சொல்லான 'மக்கள்கள்' ('peoples') என்பது சாதாரண மொழிப் பயன்பாட்டிலோ, பொதுப் பிரயோகத்திலோ வழக்கில் இல்லை.

ஆனால், அரசியல் ரீதியாகவும் சட்ட நுணுக்கங்களிலும் இந்தப் பன்மைப் பிரயோகம் நடைமுறையில் புழக்கத்தில் உள்ளது.

ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் அதிகாரத்திற்கு உரித்துடைய மக்கள் தொகுதியினர் காணப்படும்போது, இந்த 'மக்கள்கள்' என்ற பன்மைப் பிரயோகம் இன்றியமையாதது.

சிங்களப் பேரினவாதமும் மகாவம்ச மன அமைப்பும்

'இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது. அவர்கள்தான் மண்ணின் மைந்தர்கள் பூர்வீகக் குடிகள். மற்ற எல்லோரும் வந்தேறு குடிகள். சிங்கள மக்கள் மட்டுமே, இந்நாட்டில் மக்கள் என்ற அந்தஸ்த்தைப் பெறுகிறார்கள்' என்பதுதான் கடும்போக்கு சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாடு.

அதேபோல, 'ஏனையோர் இங்கு வாழ்ந்து விட்டுப் போகட்டும். அது சிங்களவர்கள் தங்கள் பெருந்தன்மையால், ஏனைய சிறுபான்மையினருக்குப் போட்ட மடிப் பிச்சை. அளவுக்கு அதிகமாகத் துள்ளாமல் இங்கு அடக்க ஒடுக்கமாக வாழ்ந்து விட்டுப் போங்கள்' என்பதுதான் கடும்போக்கு சிங்களத் தேசியவாதிகளின் மன அமைப்பு.

இதற்கு அவர்கள் பயன்படுத்துகிற அஸ்திரம், திரிபுபடுத்தப்பட்ட வரலாறு. மகாவம்சம், பேரினவாதிகளுக்கு விருப்பமான புனைவுகள், கற்பனைகள் அடங்கிய சிங்களவர்களது பழம் பெருமை கூறும் ஒரு நூல். அதனால்தான் இதனை 'மகாவம்ச மன அமைப்பு' (Mahavamsa Mindset) என அழைப்பர்.

ஆனால், இவர்கள் சிங்கள சமூகத்தில் பெருவாரியானவர்கள் அல்ல என்பதையும் சுட்டிக் காட்டவே வேண்டும். பெருந்தொகையானோர் அப்பாவிச் சனங்கள். அவர்களை இந்த அரசியல்வாதிகள்தான் உசுப்பேத்தி விடுகிறார்களே ஒழிய, மக்கள் இதில் பெரிய ஆர்வம் உடையவர்கள் அல்ல.

அவர்களுள் கணிசமானோர் மற்றவர்களை மறுக்கும், இந்தப் புறந்தள்ளும் தேசியவாதத்தின்(Exclusive Nationalism) காதலர்கள் அல்ல. சிங்கள சமூகத்தில் மட்டுமல்ல, எல்லா சமூகங்களிலும் இதுதான் யதார்த்தம்.

வைதீக தமிழ்த் தேசியவாதமும் ஆண்ட பரம்பரை மன அமைப்பும்



– சிராஜ் மன்சூர்

இதேபோல கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகள், 'இந்த நாட்டில் தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இரண்டு மக்கள்களே (கவனிக்க: மக்கள்கள்) உள்ளனர். இங்கு இது இரண்டும்தான் ஆண்ட பரம்பரை' என்று கருதுகின்றனர்

ஆகவே, 'சிங்களவர்கள் தங்களுக்கான அரசை சிறிலங்காவில் அமைப்பது பற்றி, இந்தக் கடும்போக்காளர்களுக்கு அடிப்படையில் பிரச்சினை இல்லை. சுதந்திரத்துக்குப் பின் சிங்கள அரசு அமைக்கப்பட்டு விட்டது' என்ற கருத்திலேயே இவர்கள் உள்ளனர்.

ஆனால், 'தமிழ் அரசு ஒன்றை பாரம்பரிய தமிழர் தாயகத்தில் அதாவது ஈழத்தில் அமைக்க வேண்டும். இதனை இப்போதுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைப்பதுதான் தமது ஒற்றை 'அபிலாசை' என்ற கருத்தில் உறுதியாக உள்ளனர்.

கடும்போக்கு தமிழ் தேசியவாதிகளது பெருங்கனவில் உள்ள பாரம்பரிய ஈழத்தில், புத்தளப் பிரதேசமும் அடங்கும். ஆனால், இப்போது அதை (புத்தளப் பிரதேசத்தை) சில நடைமுறைக் காரணங்களுக்காக விட்டுக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் அவர்கள் உள்ளனர்.

இவர்களைப் பொறுத்தவரை, 'இலங்கைத் தீவில், சிறிலங்கா சிங்கள அரசு, தமிழீழ தமிழ்த் தனியரசு என்ற இரு அரசுகள் நிறுவப்பட வேண்டும். அதற்காகவே இங்கு இனப் பிரச்சினை இன முரண்பாடு , 30 வருடகால ஆயுதப் போர் சிவில் யுத்தம் எல்லாமே நடந்தது.

2009 மேயில் இந்த ஆயுதப் போர் முடிவுக்கு வந்தது. ஆயுதப் போர் முடிவுக்கு வந்தாலும், இந்த சிந்தனைப் போர் கருத்தியல் போர் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.போரில் வென்ற மனநிலை, தோற்ற மனநிலை இரண்டினதும் மோதல் போக்கினுள் இலங்கையின் அரசியல் எதிர்காலம் சிக்கித் தவிக்கிறது.

இந்தப் பின்புலத்தில்தான், 'தமிழீழத்தில் தமிழர்கள்தான் பெரும்பான்மையினர். முஸ்லிம்களும் சிங்களவர்களும் அங்கு சிறுபான்மையினராக உள்ளனர்' என்ற மனப்பதிவில் இவர்கள் ஊறிப்போயுள்ளனர்.

பேரினவாதிகள் போல, வரலாற்றையும் ஆண்ட பரம்பரைக் கதையையுமே இவர்களும் தமது அஸ்திரமாய்ப் பயன்படுத்துகின்றனர். இது குறித்து தனியே ஆராயப்பட வேண்டும்.

நியாயமான அரசியல் தீர்வு

தமிழ் மக்கள் இனப் பிரச்சினையாலும் போரினாலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது நியாயமான அபிலாசைகள் கருத்தில் கொள்ளப்பட்டு, நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

அதேவேளை சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என்று எல்லோரது அபிலாசைகளும் கருத்தில் கொள்ளப்பட பேண்டும். ஏனைய கலாச்சார சிறுபான்மையினர், சிறு சமூகங்கள் உள்ளிட்ட எல்லோரது நலனும் கருத்தில் எடுக்கப்படும் தீர்வுதான் முழுமையான இறுதித் தீர்வாய் அமையும்.

இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டிக் கோரிக்கை

போருக்குப் பிந்திய உள்ளூர் பிராந்திய புவிசார் சூழமைவில், தனிநாட்டையோ தனியரசையோ கோர முடியாது என்பது பகிரங்க ரகசியம். இந்த வெளிப்படை உண்மையை இந்தக் கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். அதனால்தான் இந்த ஈழக் கோரிக்கையின் வீரியத்தைக் குறைத்து சற்றே மெதுவாக வண்டியை ஓட்டுகின்றனர்.

தொடர்ச்சி 7-ம் பக்கம்

6-ம் பக்க தொடர்ச்சி

புலிகள் இல்லாத இந்தப் பின்புலத்தில் தான், தனிநாட்டுக் கோரிக்கையை தற்காலிக மாக ஆறப் போட்டுவிட்டு, இணைந்த வடக்கு கிழக்கில் சுயாட்சி பிரதேசம் ஒன்றைக் கோருகின்றனர்.

சமஷ்டி அரசைக் கேட்பதுதான் இப்போது சாத்தியம் என்பதால், உச்சபட்ச அதிகாரப் பகிர்வு கொண்ட, இணைந்த வடக்கு கிழக்கு சமஷ்டி பற்றிய பேச்சு மேல் எழுகிறது.

தமிழர்களைப் போல, முஸ்லிம்கள் சம அந்தஸ்து கொண்டவர்கள் அல்ல என்ற வாதம்

முஸ்லிம்களை ஒரு 'குழுவினராக' இவர்கள் பேசியும் எழுதியும் வருவதற்குப் பின்னே ஒரு கருத்தியல் பார்வை இருக்கிறது. அந்தக் கருத்தியல், முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து கொடுத்துப் பார்ப்பதற்கான பெரும் மனத் தடையாக மாறி விட்டது.

இணைந்த வடகிழக்கில், முஸ்லிம்களுக்கு 'மக்கள்' என்ற அந்தஸ்த்தைக் கொடுத்துப் பார்க்க இந்தக் கடும்போக்கு தமிழ்த் தேசியவாதிகள் தயாரில்லாமல் இருப்பதன் பின்புலம் இதுதான்.

இந்தத் தீவிர, புறந்தள்ளும், கடும்போக்குத் தமிழ்த் தேசியவாதிகளின் குரலாகவே இப்போது தமிழ் மக்கள் பேரவை இயங்குகிறது. இதன் இணைத் தலைவராக வட மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் இருக்கிறார்.

அவருடைய இந்த கடும்போக்குத் தமிழ்த் தேசியவாத மனநிலையின் இறுக்கம் காரண மாகவே முஸ்லிம்கள் குறித்து திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

அவர் அப்படி என்னதான் சொன்னார்?

"எந்தவொரு இனமாக இருந்தாலும் அந்த இனத்தின் கலை, கலாசாரம், இலக்கியம் அனைத்திற்கும் அடிநாதமாக விளங்குவது அவர்களின் தாய் மொழிதான். தமிழரானாலும் சிங்களவர்களானாலும் சரி, மொழிதான் அந்த இனங்களின் பாரம்பரிய வடிவமாக அமைகின்றது.

"முஸ்லிம்கள் அரசியல் காரணங்களுக்காக தமது வடிவம் மதம் சார்ந்தது என்றும், அது மொழி சார்ந்தது அல்ல என்றும் கூறி வருகின்றனர்.

"கிழக்கு வாழ் முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசி, எழுதி, கற்று வருகின்றதனால் முஸ்லிம்களின் கலை வடிவமும் மொழி சார்ந்தது என்று கூறத் தோன்றுகின்றது.

"மொழியைப் பேசுவதற்குக் கற்றுக் கொண்ட பின்னர்தான் நாம் மதத்தை அறிந்து கொண்டோம். இந் நிலையில் முஸ்லிம் சகோதரர்களும் அடிப்படையில் தமிழ் மொழி சார்பானவர்களேதான். தமிழ் இனத்தை இனிமேல் ஒன்றிணைக்கப் போவது அரசியல் அல்ல மொழிதான்"

வரலாற்றையும் யதார்த்தத்தையும், முஸ்லிம்களது அரசியல் தனித்துவத்தையும் அப்பட்டமாக மறுதலிக்கின்ற வெற்று அரசியல் கோஷமேயன்றி இது வேறென்ன? அரசியல் லாபத்தை சம்பாதிப்பதற்கான மலினமான உத்திதான் இது.

விக்னேஸ்வரன் போன்ற ஒரு முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி இப்படிப் பேசியிருக்கக் கூடாது. அதுதான் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கும் ஆதங்கம். ஆனால், அவரும் இந்த மாமூல் அரசியலுக்குள் மழுங்கிப் போய் விட்டதுதான் பெரும் அவலம்.

விக்னேஸ்வரன் ஐயா இந்த மாமூல் அரசியலில் நன்கு தேறி வருகிறார்.

ஐயா மட்டுமல்ல, அவர் இப்போது தலைமை கொடுக்கும் தமிழ் உணர்வா ளர்கள் பலரும், இதற்குப் பின்னே வெளிப் படையாகவும் திரைக்குப் பின்னேயும் அணி திரண்டுள்ளனர். வன் தேசியம், மென் தேசியம் பற்றி தத்துவார்த்த விவாதங்கள் நடத்தி இதற்கு ஒரு கருத்தியல் கட்டுமானத் தயும் சமைத்துள்ளனர்.

இந்தத் தீவிர கடும்போக்குத் தமிழ் தேசியம், இணைந்த வடகிழக்குக்கு மாற்றாக எதையும் பரிசீலிக்கத் தயாரில்லை. முஸ்லிம் மக்கள், ஈழம் நோக்கிய தங்களது அரசியல் பாதையைக் குழப்புவதாகவே இவர்கள் சிந்திக்கின்றனர்.

இதுதான் மிக ஆபத்தான அரசியல் பொறி. தமிழ் முஸ்லிம் மக்களைக் குழப்பி மோத விட்டு விட்டு, அதில் குளிர் காய பல சக்திகள் காத்திருக்கின்றன. அவர்களுக்கு இது நல்ல வாய்ப்பாக மாறி விடும்.

இந்த சந்தர்ப்பத்தில், தமிழ் மக்கள் பேரவை யின் தீர்வுத் திட்ட யோசனைகளில் முஸ்லிம்கள் குறித்துக் கூறப்பட்டுள்ள விடயங் களை சுட்டிக்கு காட்டுவது மிக அவசியம்.

"வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தனித்துவத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். முஸ்லிம் சமூகத் தால் இணைந்த வடக்கு கிழக்கில் தமது குழு சார் உரிமைகளை நிறுவன ரீதியாக பாதுகாப்பதற்கு எடுக்கும் முன் வைப்பு எதுவாயினும், அது தொடர்பில் அவர் களுடன் கலந்தாய்வு செய்யத் தயாராக இருக்கின்றோம் என பற்றுறுதியுடன் கூறிக் கொள்கிறோம்."

மேம்போக்கில் பார்த்தால் முஸ்லிம்களை அனுசரிப்பது போல தோன்றினாலும், இதற்குள் வார்த்தைகளின் அரசியல் விளை யாட்டு ஒளிந்திருக்கிறது.

ஒரு புறம், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்பவர்கள், இன்னொரு புறம் முஸ்லிம்களை ஒரு 'சமூகம்' என்றுதான் கூறுகின்றனர்.

இன்னும் ஒரு படி கீழிறங்கி முஸ்லிம்களது 'குழு சார்' உரிமைகள் குறித்துப் பேசத் தயார் என்று கூறியுள்ளனர். அதுவும் 'இணைந்த வடக்கு கிழக்கு' என்ற ஒரு நிலைக்குள்ளிருந்து கொண்டுதான் பேசத் தயார் என்கின்றனர்.

'முஸ்லிம் சமூகம்' என்று எழுத உயர்ந்த தமிழ் மக்கள் பேரவையினரின் கைகளுக்கு, 'முஸ்லிம் தேசம்' (Muslim Nation) என்றோ, 'முஸ்லிம் அரசியல் சமூகம்' என்ற அர்த்தம் தரும் Muslim Polity என்றோ அல்லது 'முஸ்லிம் மக்கள்' என்றோ ஏன் எழுத வரவில்லை?

இந்த சொல் தேர்வுகள் தற்செயலாக நிகழ்ந்தவை அல்ல. ஆழ ஊடுருவிப் போயி ருக்கும் தமிழ் மேலாதிக்கக் கருத்தியலின் புற வடிவமே இது.

கடும்போக்குத் தமிழ்த் தேசியவாதிகளின் இவ்வாறான கருத்துக்கள், 'எழுக தமிழ்' நிகழ்வு மூலம் முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகள் எல்லாமே, தர்க்க ரீதியாக தமிழ்த் தேசியவாதிகளின் விருப்புக்கு மாறாக, எதிர் விளைவுகளையே கொண்டு வந்து சேர்க்கும்.

முஸ்லிம் பரிமாணத்தை புறந்தள்ளுவதன் அபாயம்

வரலாற்றில் முஸ்லிம் மக்களைப் பகைத்ததற்கு, தமிழ்த் தேசியம் கொடுத்த விலை மிகப் பெரியது. மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை நோக்கி அது சென்று விடக் கூடாது. அதைப் புரிந்து கொள்ளும் மன நிலையில் இப்போது அவர்கள் இல்லை. காலம் கடந்துதான் அவர்கள் இதைப் புரிந்து கொள்ளுவார்கள்.

சமீபத்தில் 'Muslims Should Be Heard' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமரின் பாராளுமன்ற உரையிலிருந்து, ஒரு மேற்கோள் காட்டுவது மிகப் பொருத்த மானது. அது பலருக்கும் பதிலாய் அமையும்.

"முஸ்லிம் பரிமாணம் என்பது வேறு பட்டது; வித்தியாசமானது. ஏனென்றால், முஸ்லிம்களை அவர்களது சமயப் பிணைப்பு தான் இறுக ஒன்றிணைத்திருக்கிறது. முஸ் லிம்கள் ஒரு மொழி சார்ந்த சமூகம் அல்ல.

"தமிழ் இனத்தவர்களின் அபிலாசைகளை விட, அவர்களது அபிலாசைகள் வேறு பட்டவை. தமிழ் இனத்தின் மொழி சார்ந்த அபிலாசைகளை நிறைவேற்றுவதன் மூலம், முஸ்லிம் சமூகத்தினரின் விவகாரங்களைத் தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்துகிறோம் என்று கருத முடியாது.



மலையகத்தில் ஏழு நாட்களையும் தாண்டி தொடரும் தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள்!

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்தவாரம் பெரும் தொழிற்சங்கப் போராட்டமொன்றில் இறங்கியிருக்கிறார்கள். ஏழாவது நாளாகவும் தொடரும் இந்தப் போராட்டம், (ஒக்டோபர், ஞாயிறு, 02) வீதிமறியல், கண்டனப் பேரணி, பணிப் பகிஷ்கரிப்பு எனப் பல வடிவங்களில் போராட்டங்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன. மலையகத்தின் பல்வேறு பகுதிகளிற்கும் பரவியுள்ள தொழிலாளர் போராட்டங்கள் தலைநகர்வரை பரவியிருக்கிறது.

சம்பள உயர்வு குறித்து முதலாளிமார்சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களிற்கும் இடையில் நடைபெற்ற ஒன்பதாவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்துள்ள நிலையில்,கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வருகின்ற தோட்டத் தொழிலாளர்கள் கொதித்தெழுந்து, வீதியிலிறங்கிப்போராட்டங்களை நடாத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

மலையகத்தில் பல பகுதிகளிலும் தன்னிச்சையாகதிரண்ட தொழிலாளர்கள் வீதிகளை மறித்தும் ரயர்களை எரித்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல இடங்களில் கண்டனப் பேரணிகளை நடாத்தியிருக்கிறார்கள். பணிப்பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆலயங்களில் தேங்காயுடைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒப்பாரிப் போராட்டம் நடாத்தியிருக்கிறார்கள். போராட்டங்களில் தொழிற்சங்கத் தலைவர்களுக்கெதிரானகோஷங்களையும் எழுப்பியிருக்கிறார்கள். அட்டன்மல்லியப்பு சந்தியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்,முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் ரொஷான்இராஜதுரையின் உருவப்பொம்மையை எரித்துதங்களது எதிர்ப்பை வெளிக்காட்டியுமுள்ளார்கள்.

அமைப்பு ரீதியற்ற வகையில் தன்னிச்சையாகத்திரண்ட தோட்டத்தொழிலாளர்கள் இப்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்என்றே கூறப்படுகின்றது. எனினும் இப்போராட்டங்களின் பின்னணியில்தொழிற்சங்கமொன்று இருந்து வருவதாகக் குற்றம்சாட்டியிருக்கிறார் அமைச்சரொருவர். எனினும்மலையகத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் போராட்டங்கள் தன்னிச்சையானதும் தொழிலாளர்களது கோபத்தின் வெளிப்பாடுமே எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கனடா தீபத்திற்கு கருத்துத் தெரிவித்த மக்கள் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்சட்டத்தரணி இ.தம்பையா, ஹட்டன்புளியாவத்தை போன்ற ஒருசில இடங்களில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் அமைப்புத் தவிர்ந்த ஏனைய மலையக அரசியல் தொழிற்சங்கங்களுக்கு எதிரான கோஷங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு அப்போராட்டங்கள் அவர்களால்ஒழுங்கமைக்கப்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. எனினும் தாங்க முடியாத பொருளாதாரச் சுமைகளில் வாழும் தோட்டத்தொழிலாளர்களின் தன்னிச்சையான முடிவின்பேரிலேயே பல பிரதேசங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்தார்.


கடந்தவியாழக்கிழமைகொழும்புதொழில் திணைக்களத்திற்கு அருகில் செங் கொடிச் சங்கமும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து அரசாங்கம் நிர்வகிக்கும் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை இணைத்து ஆர்ப்பாட்டத்தை நடாத்தியிருக்கிறார்கள். முடிவு காணப்படும்வரைதொடர்ந்தும் போராட்டங்களை நடாத்தப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

1000 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும்,நிலுவைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும், கூட்டுஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும்,அரசாங்கம் சம்பளப் பேச்சுவார்தையில்தலையிடவேண்டும்என்ற கோரிக்கைகளை முன்வைத்தேதோட்டத் தொழிலாளர்கள் இப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையிலுள்ள 840 அளவிலான பெருந்தோட்டங்களில் சுமார் இரண்டு இலட்சம் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். இதனைவிட, பதிவு செய்யாது சுமார் 50 ஆயிரம் அளவிலான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வழியில் சுமார் 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரம் பெருந்தோட்டத் தொழில் துறையின் மிகக் குறைந்த சம்பளத்திலேயே தங்கியிருக்கிறது.

தற்போது, 2013 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் படி அடிப்படைச் சம்பளமாக 450 ரூபா வழங்கப்பட்டு வருகிறது. ஊக்குவிப்புக்கொடுப்பனவாக 140 ரூபா வழங்கப்பட வேண்டும்.

\- விஜே



ஆனால் 75 சதவீதமான வேலை நாட்களுக்கு சமூகமளித்தால் மாத்திரமே இந்த ஊக்குவிப்புக்கொடுப்பனவைப் பெறமுடியும். ஆனால் இதற்கானவாய்ப்புக்கள் குறைவே. இதனைவிட குறைநிரப்புக்கொடுப்பனவாக 30 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதன் படி அதிக பட்சம் நாளொன்றுக்கு 620 ரூபாயை மட்டுமே பெறமுடியும். ஊக்குவிப்புக்கொடுப்பனவின்றி 480 ரூபாயை மட்டுமேபெற முடியும். வேலை நாட்கள் குறைவாக இருப்பதன்காரணமாக மாதாந்தம் குறைந்த வருமானத்தையேதொழிலாளர்கள் பெற்று வருகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுநிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் 2015 மார்ச்மாதத்துடன் காலாவாதியான நிலையில் , கடந்த ஒன்றரை வருடங்களாக புதுப்பிக்கப் படாமலுள்ளது. இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்த மூலம் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வுகடந்த ஒன்றரை வருடங்காளக இதுவரை கிடைக்க வாய்ப்பற்றுப் போயுள்ளது. ஜனாதிபதித் தேர்தலிலும்,பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் 1000ரூபா சம்பள உயர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியை வழங்கியே வாக்குக் கேட்டுநின்றார்கள். எனினும் இதுவரை சம்பள உயர்வுகுறித்த பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை.சம்பளப் பேச்சு வார்த்தைகளில் அராசங்கம்தலையிட முடியாதுள்ளது. அதே சமயம்அரசாங்கத்தின் கீழியங்கிவரும் தோட்டங்களிலும் இத்தகைய நிலைமையே காணப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவான 2500 ரூபாயும் ஜூன்,ஜூலைமாதங்களிற்குமட்டும் வழங்கப்பட்டது. அதுவும்எல்லாத்தோட்டங்களிலும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

தற்போது, முதலாளிமார் சம்மேளனத்திற்கும்இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட சில தொழிற் சங்கங்களிற்கும் இடையில் 1000 ரூபாசம்பள உயர்வு தொடர்பாக ஒன்பது சுற்றுவார்த்தைப் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளபோதிலும் தீர்மானங்கள் எதுவும்எடுக்கப்படவில்லை.

இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட இ.தொ.கா. செயலாளரான வடிவேல்சுரேஷ்,முதலில் 730ரூபாவை வழங்குவதற்காக ஏற்கனவே இணங்கிஇருந்த சம்மேளனத்தினர், பின்னர் தமதுநிலைப்பாட்டினை மாற்றிக் கொண்டுள்ளனர். எனவே கடந்தகால பேச்சு வார்த்தைகளின் அர்த்தம் என்ன? என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார். அவர் தற்போது முரண்பட்டுக் கொண்டு பேச்சுவார்த்தைகளில்கலந்துகொள்ளாதிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அ.அரவிந்தகுமார், கூட்டு ஒப்பந்தத்தில் பல்வேறுபிழையான சரத்துக்கள் உள்ளடக்கப் பட்டிருப்பதால் தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதரங்களை இழந்து சொல்லொணாத் துயரங்களைஎதிர்நோக்கிய வண்ணமுள்ளனர். கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளம் தொடர்பான சரத்து அமுலில் இல்லா திருப்பின் சம்பள நிர்ணய சபையினூடாக முன்னர் அமுலிலிருந்த முறையானதும் கிரமமானதுமான சம்பன உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்திருக்கும்.

ஆனால்,கூட்டு ஒப்பநதம் வந்தபின் தொழிலாளர்களின் அன்றாட வேதனத்தில் பாரிய இடைவெளிஏற்பட்டுள்ளது. 900 ரூபாவுக்கும் அதிகமான சம்பளம்பெறவேண்டிய நிலைமாறி தற்சமயம் வெறுமனே 450ரூபாய்க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத்தெரிவித்திருக்கிறார்.

தொழிலாளர்போராட்டங்கள்பரவிவரும் நிலையில்,தொழிற் சங்கங்களும், மலையக அரசியல்கட்சிகளும், புத்திசீவிகளும் செய்வதறியாதுள்ளன.இவர்கள், அமைப்பு ரீதியற்ற போராட்டங்களால்வெற்றிகளைப் பெறமுடியாது என்ற கருத்தைமுன்வைத்திருக்கிறார்கள்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடும்தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒருமித்தநிலைப்பாடு இல்லாத நிலையிருப்பதனால் பேச்சுவார்த்தைகளில் உறுதியான கோரிக்கைகளை முன்வைக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், முதலாளிமார்சம்மேளனம் இறுக்கமான முடிவுகளுடனேயே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில், மக்கள் தொழிலாளர் சங்கம்எதிர்வரும் 09 ஆம் திகதி ஹட்டனில் ஐக்கியப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றுக்கான கலந்துரையாடலுக்குஅழைப்பு விடுத்திருக்கிறது. இக்கலந்துரையடல் குறித்து கனடா தீபத்திற்கு கருத்து தெரிவித்தசெயலாளர் சட்டத்தரணி இ.தம்பையா, ஒன்றிணைந்து கலந்துரையாடுவதன் மூலமே உறுதியான முடிவுகளை எட்ட முடியும். ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ள பெற முடியும் எனத்தெரிவித்ததுடன், கலந்துரையாடலுக்கு அனைத்து தொழிற் சங்கங்களுக்கும், சிவில் அமைப்புக்களுக்கும் அக்கறையுள்ள தனிநபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



கனடாவும் அகதிகளும்

கடந்த வார இதழிலே, நியூபவுண்லாந்து மாகாணத்தின் அத்திலாந்திக் சமுத்திர ஆழ்கடலிலே நியூபவுண்லந்து மீனவர்களால் காப்பாறப்பட்டு, பின் கனடிய எல்லைப்பாதுகாப்புப் படையால் செயின்ற் ஜோன்ஸ் நகருக்குக் கொண்டுவரப்பட 155 ஈழத் தமிழர்களைக் குறித்து கனடாவில் பெரிய அனுதாப அலை எழுந்தது என்றும், அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து இவர்களுடைய வருகை குறித்து சர்ச்சைகள் வெடித்தன என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த இதழிலே அவை பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம். முதலிலே இவர்கள் வருகையையொட்டிக் கனடாவில் நடந்தேறிய சில சுவாரஸ்ய சம்பவங்கள் பற்றியும் சொல்லியாக வேண்டும்.

இவர்களுடைய வருகை கனடாவில் மட்டுமல்ல அன்றைய சூழலில் உலகம் எங்குமே ஒரு முதன்மைச் செய்தியாக இடம் பிடித்தது. ஊடகவியலாளர்கள் எல்லோருமே "இவர்கள் யார்?", "இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?" என்பதை அலசி ஆராய்ந்து, இவர்கள் குறித்த விபரங்களைத் திரட்ட மும்முரமாகத் தலைப்பட்டனர். அப்படியான சில பத்திரிகையாளர்கள் ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தை தொடர்பு கொண்டு "நியூபவுண்லாந்துக் கடலில் காப்பாற்றப்பட்டவர்கள் ஈழத்தமிழர்கள்தான் என்பதை உறுதி செய்ய முடியுமா?" எனக் கேட்டனர். அதற்கு தூதரக அதிகாரி ஒருவர் "அவர்கள் ஈழத்தமிழர்களாக இருக்க முடியாது அவர்கள் ஈழத்தைச் சேர்ந்து சீனர்களாக இருக்கலாம்" என்று தெரிவித்திருக்கிறார். இந்தத் தகவலைக் குறித்து ஆழமாகஆராயப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அப்படி ஒரு 'இனக்குழு' இல்லை என்பது தான் பதிலாகக் கிடைத்தது. அதன்பின் கனடா ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக இன்னும் பல கேள்விகளை அந்த அதிகாரிகளை நோக்கி தொடுத்துக் கொண்டே இருந்தனர்.



– டேவிட் பூபாலபிள்ளை

இதற்கிடையே நியூபவுண்லாந்துக் கடலிலே காப்பாற்றப்பட்ட எம்மவரோ 'தாம் இலங்கையில் இருந்து இந்தியா சென்று அங்கிருந்து கப்பலில் ஏறியே கனடா வந்ததாக' மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தனர். ஈழத்திலே தமிழர்களுக்கு நடக்கும் தொடர்ச்சியான வன்முறைகள் காரணமாகத் தாம் நாட்டை விட்டு நீங்கத் தலைப்பட்டதாகவும், தம்மைப்போன்ற அகதி மக்களுக்கு கனடா ஒரு மிகப்பாதுகாப்பான நாடு என்பதால் தாம் கனடாவை நோக்கிப் பயணித்ததாகவும் சொல்லிக்கொண்டு இருந்தனர். ஆனால் இரண்டு நாட்களின் பின்னர் ஜேர்மனியிலிருந்து கசிந்த தகவல் ஒன்றினால் 'இவர்கள் ஜேர்மனியிலிருந்துதான் கனடாவிற்கு வந்திருக்கலாம்' என்ற சந்தேகத்தை பலர் எழுப்பத் தொடங்கினர்.

இதைத் தொடர்ந்து கனடிய அதிகாரிகள் இவர்களை தொடர்ச்சியாகவும், கடுமையாகவும் விசாரிக்கத் தலைப்பட்டனர். அவர்கள் நடத்திய பலத்த விசாரணை களின் பின்னர், 'தாம் ஜேர்மனியில் இருந்ததே வந்ததாக' இரண்டு நாட்கள் கழித்து நம் தமிழர்கள் ஒப்புக் கொண்டனர். இவர்களுடைய இந்த புதுத் தகவலால் கனடிய மக்களிடையேஇவர்களைக் குறித்து எழுந்திருந்த அனுதாப அலை ஒரு எதிர்ப்பலையாக மாறத் தொடங்கியது. "இவர்கள் உண்மையான அகதிகள் அல்ல. இவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள்" என்ற குரல்கள் கனடாவின் பல பாகங்களிலிருந்தும் எழத் தொடங்கின. அன்றைய கனடிய அரசின் உள்மட்டத்தில்கூட இவர்களை திருப்பி அனுப்புவது குறித்த வாதப் பிரதிவாதங்கள் வெடிக்கத் தொடங்கின. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதை உணர்ந்த அன்றைய கனடியப் பிரதமர் பிரைன் மல்ரோனி அவர்கள், விடுப்பிலே சென்றிருந்த கனடிய நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி அங்கு இதைப்பற்றி விவாதிக்க வைக்கத் தீர்மானித்தார்.

இதற்கிடையே அன்றைய காலகட்டத் திலே கியூபெக் மாகாணத்தில் மிகத் துடிப்புடன் இயங்கிய தமிழர் அமைப்பான 'கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியம்' அதனுடைய தலைவர் திரு செல்வா பொன்னுச்சாமி அவர்களை இவர்களுக்கு உதவுவதற்காக செயின்ற் ஜோன்ஸ் நகருக்கு அனுப்பி வைத்தது. அவரும் தமிழர்களுக்கு நன்கு பரிச்சியமான சட்டத்தரணி Joyce Yedid அவர்களைத் தன்னுடன் அழைத்து கொண்டு சென்று, கப்பலில் வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தலைப்பட்டார். இதேபோல ரொறன்ரோ மாநகரிலே தமிழர்கள் நலன் காக்க அமைக்கப்பட்ட 'தமிழீழச் சங்கமும்' தமது சார்பாக திரு அருள் அருளையா அவர்களை செயின்ந் ஜோன்ஸ் நகருக்கு அனுப்பி வைத்தனர்.

கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியம் மற்றும் தமிழீழச் சங்கம் என்ற இந்த இரு அமைப்புக்களும் கப்பலில் வந்தவர்களுக்கு உதவி செய்ததோடு, அன்றைய கனடிய மையஊடகங்களினால் எழுப்பப்பட்ட பலவித கேள்விகளுக்கும் முகம் கொடுத்து, இலங்கையிலே தமிழர்கள் பட்ட இன்னல்களைக் கனடா ஊடகங்கள் வாயிலாக மட்டுமன்றி சர்வதேச ஊடகங்கள் வாயிலாகவும் வெளிக் கொணரவும் பெரும் உதவி செய்தன.

இவை இவ்வாறு இருக்க கனடாவின் சரித்திரத்திலே முதன் முறையாக கோடை கால விடுப்பிலே சென்றிருந்த நிலையில் முதன் முறையாகத் திருப்பி அழைத்துக் கூட்டப்பட்ட கனடிய நாடளுமன்ற கூட்டத் தொடரிலே பலத்த வாதப்பிரதிவாதங்கள் நடக்கத் தலைப்பட்டன. அன்றைய பிரதமர் பிரைன் மல்ரோனி அவர்கள் "கனடா ஒரு மனிதாபிமான நாடு", "வந்தாரை வாரி அரவணைக்கும் நாடு", "அகதிகளை ஒருபோதும் புறந்தள்ளாத நாடு" என்றெல்லாம் தனது உரையில் குறிப்பிட்டு "இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது முக்கியமல்ல. இவர்கள் கனடாவிற்கு அடைக்கலம் தேடி வந்தவர்கள். அதுதான் முக்கியம்" என்றும், "கனடிய அரசு இவர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக கனடாவில் தங்குவதற்கு வழிவிடும். இந்தக் காலப்பகுதியில் இவர்களுடைய அகதிக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு சரியான முடிவுகள் எட்டப்படும்" என்றும் அறிவித்தார். கனடியப் பிரதமருடைய அந்த அறிவிப்புக்கள் எதிப்பு அலைகளுக்கு ஓரளவு முற்றுப்புள்ளி வைத்தன.

விளைவாக, அந்த 155 பேருக்கும் ஒரு வருடத்திற்கான அமைச்சர் அனுமதிப்பத்திரம் (Minister's Permit) வழங்கப்பட்டு ஒரு வருட காலம் அவர்கள் கனடாவில் தங்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. "அதன்பின் அவர்களுக்கு என்ன நடந்தது?" என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.



'எழுக தமிழ்' எழுச்சியும்
தமிழ் மக்கள் பேரவை கவனிக்க வேண்டிய குறிப்புக்களும்!

கடந்த வாரம் நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வு, வெற்றிகரமான ஒரு பேரணியாக நடந்து முடிந்துள்ள அதே வேளை, அந்த நிகழ்வு தொடர்பான பல்வேறுபட்ட மட்டங்களிலுமிருந்து பலவிதமான விமர்சனங்களும் அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்வை முன்னின்று நடாத்திய தமிழ் மக்கள் பேரவை மீதும், அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்பாகவுமே இந்த கருத்துக்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன.

இந்த எழுக தமிழ் நிகழ்வை, தமிழ் மக்களை மீண்டும் இனவாத எழுச்சிக்குத் தூண்டும் ஒரு நடவடிக்கையாக சிங்கள கடும் போக்கு அரசியல் வாதிகளும், இனவாத சக்திகளும் தமது எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றனர். அதேவேளை, வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளான, நில அபகரிப்பு, மீள்குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினைகள், மீனவர்களது பிரச்சினை, அகதி முகாம்களில் இன்னமும் வாழும் மக்களது நிலங்களிலிருந்து இராணுவத்தை வெளியேறச் செய்தல், இருபது வருடங்களுக்கு மேலாக விசாரணைகள் எதுவுமின்றி சிறைவைக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகள் பிரச்சினை மற்றும் நீண்டகால அடிப்படையிலான அரசியற் தீர்வு போன்ற விடயங்கள் பற்றி தமிழ் மக்கள் சார்பில் செயற்படுகின்ற சிந்திக்கின்ற அணியினரும் கூட இது இனவாத சக்திகளுக்கு துணைப்போகும் ஒன்றாகவும், நடந்து கொண்டிருக்கும் தீர்வு முயற்சிகளை குழப்பவே இந்த நிகழ்வு உதவி செய்யும் என்றும் விமர்சனத்தை முன்வைக்கின்றனர்.

இந்த இரண்டாவது தரப்பினரின் வாதத்துக்கு வலுவூட்டுவதாக, முதலாவது தரப்பின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்பது உண்மை தான். ஆனால் இந்த விடயங்கள் உண்மையில் நிதானமான விவாதத்துக்குரியவை. இவை பற்றிய மதிப்பீடொன்றை நடத்துவது இக் கட்டுரையின் நோக்கமில்லை என்றபோதும், தமிழ் மக்களின் உரிமைக்கான எழுச்சியாக செய்யப்பட்ட இந்த நிகழ்வில், இத்தகைய விமர்சனங்கள் வருவதற்கு ஆதாரமாக இருந்த விடயங்கள் என்ன என்பதை நாம் கணக்கில் எடுப்பது முக்கியமானது.

தமிழ் மக்கள் பேரவை, ஒரு சமூக அமைப்பாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் அதன் பின்னால் அது அரசியற் தீர்வுக்கான பிரேரணையாக முன்வைத்த தமது அரசிலமைப்பு நகலறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களைத் தான் அது இந்தப் பேரணியில் வாசித்த பிரகடனத்திலும், முதலமைச்சரின் பேச்சிலும் வெளிப்படுத்தியுள்ளது. அதைவிட புதிதாக எதையும் சொல்லவில்லை. அந்தக் கருத்துக்கள் தொடர்பான அவசியமான மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து நடாத்தப் பட்டிருக்க வேண்டிய விவாதங்கள் எதுவும் நடக்கவில்லை. குறிப்பாக, இப்போது எழுச்சியை விமர்சனம் செய்யும் தமிழ் மக்களின் சார்பாக சிந்தித்தும் செயற்பட்டும் வருபவர்கள் அதைக் கணக்கில் எடுக்கவேயில்லை என்று சொல்லலாம். உண்மையில், அவற்றில் கணக்கில் எடுக்கப்பட்டு விவாதித்து திருத்தப்பட வேண்டிய விடயங்களும் உள்ளடங்கியிருந்தன.

இவற்றில் முதலாவதும் முக்கியமானதும், இன்றைய வடக்குக் கிழக்கு இணைப்புக்கு சவாலாக உள்ளதுமான விடயம், கிழக்கில் வாழும் முஸ்லிம்களுடன் சம்பந்தப்பட்டது. வடக்கு கிழக்கும் இணைந்த பிரதேசத்தை தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் என அடையாள படுத்தும் போது அங்கு வாழும் முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாடு மிகவும் முக்கியமானது. முஸ்லிம்களை தமிழர்கள் என்றும், அவர்களை ஒரு மதச் சிறுபான்மை என்றும் கணிப்பிடுவதிலிருந்து தொடங்குகிறது இவர்களது தவறு. இதனால் எழும் முதலாவது சிக்கல்,வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற சொற்பதம். வடக்குக் கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களதும் தாயகமும் அதுவே என்ற உண்மையை சொல்லத் தயங்கும் அல்லது விரும்பாமலிருக்கும் நிலை பேரவையின் அரசியல் சாசன வரைபு அறிக்கையிலும் காணப்படுகிறது. மொழியாலிணைந்த சமூகங்கள் என்ற ஒருங்கிணைப்பு, தம்மை ஒரு தனித்துவமான கலை பண்பாட்டு வாழ்வியலைக் கொண்ட இனமாக கருதும் நிலைக்கு வளர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் மீது அவர்களது தனித்துவத்தைக் கருதாது கட்டாய இணைப்புக்குள் கொண்டுவரும் ஒரு செலாகவே கருதப்படும் என்பதை பேரவை புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அதிலும் முதலமைச்சர் பதவியேற்பின் போது கையிலே வேல் பிடித்து சைவ முறைப்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதை பார்க்கும் ஒருவர், இது ஆறுமுக நாவலர் காலத்து சைவத் தமிழின் தொடர்ச்சியா என நினைக்க நிறையவே வாய்ப்புண்டு. இத்தகைய அரச நடவடிக்கைகளில் மதச்சார்பற்ற தன்மையை கடைப்பிடிப்பதைப் பற்றிய நுண்ணுணர்வு அற்றிருப்பது, பிற மத சமூகங்களின் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தவே செய்யும். பேரவையின் அரசியல் யாப்பு வரைபில், மதச்சார்பற்ற

தொடர்ச்சி 15-ம் பக்கம்

– அரவிந்தன்



'சீக்கா' வைரஸ் நோயும் அதன் ஆபத்தான விளைவுகளும்!

சீக்கா வைரஸ் நோய், MDJ Aedes எனும் நுளம்பு நம்மைக் கடிக்கும் போது அதற்குள் இருக்கும் இந்த வைரஸ் நம் இரத்தத்தோடு கலப்பதால் ஏற்படுகிறது. இந்த வைரஸ் உடலில் சேரும் பொழுது முதலில் காய்ச்சல் ஏற்படும். அதோடு கூட தோல் வெடிப்பு, வெண்படலம், தசை மற்றும் மூட்டு வலி, உடல் சோர்வு அல்லது தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படும் (mild fever, skin rash, conjunctivitis, muscle and joint pain, malaise or headache). இந்த அறிகுறிகள் பொதுவாக 27 நாட்களுக்கு நீடிக்கும்.

முதன் முதலில் இந்த சீக்கா வைரஸ் 1947இல் உகண்டாவில், அதுவும் குரங்களில் காணப்பட்டது. பின்பு மனிதர்களிடையே 1952களில் உகண்டாவிலும் ரன்சானியாவிலும் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த வைரஸின் தாக்குதல் ஆபிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, மற்றும் பசுபிக் இடங்களுக்கும் பரவியது. அப்படியே 1960 முதல் 1980 வரையில் ஆபிரிக்கா மற்றும் ஆசியா நாடுகளில் மனிதர்கள் மூலம் இந்த வைரஸ் தொற்றத் தொடங்கியது. 2007இல் முதலாவது பரவலான பெரிய வைரஸ் தாக்கம் யப் என்ற தீவில் (Island of Yap - Federated States of Micronesia) ஏற்பட்டது. இதேபோன்ற இன்னுமொரு சீக்கா வைரஸ் தாக்கம், ஜூலை மாதம் 2015இல் பிரேசிலில் ஏற்பட்டது.

விரிவான ஆய்வின் பின் கிடைத்த ஆதாரங்களின் படி இந்த சீக்கா வைரஸினால் வெறும் காய்ச்சல் மட்டுமல்லாது பல சிக்கலான பின்விளைவுகள் (microcephaly and Guillain-Barré syndrome) கண்டறியப்பட்டுள்ளது. கடுமையான ஆய்வின் முடிவுகள் இந்தவைரஸினால் நரம்பியல் கோளாறுகளும் ஏற்படும் என சொல்லப்படுகிறது.

சீக்கா வைரஸினால் பாதிக்கப்பட்ட ஒருவரைக் கடிக்கும் ஏடிஸ் பேரின நுளம்பானது மற்றவர்களைக் கடிக்கும் போது இந்த வைரஸ் காவப்படுகிறது. இந்த வகை



நுளம்பானது அதிகாலையிலும் மற்றும் மதிய நேரங்களிலுமே அதிகமாகத் தாக்கும். டெங்கு, சிக்கன்குனியா, மஞ்சள் காய்ச்சல் (dengue, chikungunya and yellow fever) போன்ற இந்த தொற்று வியாதிகளையும் இந்த வகை நுளம்பே பரப்புகிறது. பாலுறவின் போதும், குருதி மாற்றீட்டின் போதும் இந்த வைரஸ் தொற்றிக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

இந்த வைரஸினால் ஏற்படும் காய்ச்சல் சாதாரண காய்ச்சல் போலவே இருப்பதினால், காய்ச்சலின் அறிகுறிகளை வைத்து இது சீக்கா வைரஸ் தானா என்று கண்டறிய முடியாது. காய்ச்சல் உள்ளவரின் இரத்தத்தையோ, சிறுநீரையோ, எச்சிலையோ அல்லது விந்துக்களை ஆய்வுகூடத்தில் பரிசோதித்து பார்பதன் மூலமே இந்த வைரஸ் உள்ளதா என்று அறிய முடியும்.

இப்பொழுது, உலக அளவில் சீக்கா வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய பிராந்தியங்களில் இருநூறு கோடிக்கும் அதிகமானவர்கள் வாழ்வதாக இது குறித்த புதிய ஆய்வின் முடிவு எச்சரிக்கிறது. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட ஆசிய நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் அதிகபட்ச ஆபத்தை எதிர்நோக்குவதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

சீக்காவின் பெருந் தொற்றைத் தடுப்பதும், கண்டறிவதும், எதிர்கொள்வதும் கடினமானதாக இருக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். சீக்கா ஏற்கனவே உலக சுகாதார நெருக்கடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில், ஒலிம்பிக் போட்டிகளையே அது நிறுத்திவிடும் அச்சுறுத்தல் நிலவியது. ஆனாலும் இதனால் எத்தனை பேர் பாதிக்கப்படுவார்கள், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை விஞ்ஞானிகளால் இன்னமும் அடையாளப்படுத்த முடியவில்லை. அதை கண்டறிந்தால்தான், அந்நோய்ப் பரவலை எதிர்கொள்ளத் தயாராக முடியும்.

பல குழந்தைகள் மூளை வளர்ச்சிக் குறைபாடுடன் பிறந்ததற்கு சீக்கா தொற்றே காரணமாக காட்டப்படுகிறது. இதுவரை இதன் பிரதான தாக்கம் பிரேஸிலில் மட்டுமே இருந்தது. ஆனால் சமீபத்தில் ஐம்பதுக்கும் அதிகமான நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இது பரவியுள்ளது.

கடந்த மாதம் சிங்கப்பூரில் பலருக்குச் சீக்கா தொற்று ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து அதன் பரவலைத் தடுக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் மீண்டும் எழுந்துள்ளன. சீக்கா பரவல் தொடர்பான இந்த புதிய ஆய்வின் கணிப்புகள் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.


சீக்கா பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயணித்தவர்களின் எண்ணிக்கை, சீக்கா வைரஸைப் பரப்பக்கூடிய கொசுக்கள் இந்த நாடுகளில் ஏற்கனவே இருப்பது, சீக்காத் தொற்றை எதிர்கொள்ளத் தேவைப்படும் சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் என்பனவே அவையாகும். சீக்கா வைரஸால் உருவாகக்கூடிய சுகாதார ஆபத்தின் முழு அளவு இன்னமும் வெளியாகவில்லை. பிரேஸிலில் நடந்ததைப்போல் சீக்கா பெருந் தொற்றாகப் பரவும் ஆபத்து நீடிக்கிறது என்பது மட்டும் இப்போதைக்கு மீண்டும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

மக்களிடையே இந்த வைரஸ் குறித்த விழிப்புணர்வு இன்னும் போதாமல் இருக்கிறது. முக்கியமாக வைரஸ் உள்ள நுளம்பின் கடியில் இருந்து தப்புவதே பிரதானமாகும். இதற்காக உடலைக் கூடியளவு மறைக்கும் வண்ணம் உடைகள் அணிவது, வீட்டில் கதவு, ஜன்னல்களை மூடி வைப்பது. நுளம்பு வலைக்குள் நித்திரை கொள்வது, நுளம்புகளை விரட்டக் கூடிய கொசு விரட்டிகளைப் பாவிப்பது போன்றவையாகும். முக்கியமாக நுளம்பு முட்டையிட்டு விருத்தியடையாதபடி வீட்டையும் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளையும் எப்பொழுதும் துப்பரவாக வைத்திருக்க வேண்டும்.

கனடாவைப் பொறுத்தவரை இவ்விதமான நுளம்புகளால் வைரஸ் பரவுவது கடினமான விடயமாகும். இதற்கு காரணம் கனடாவின் காலநிலை தான். ஆனாலும் சீக்கா வைரஸ் உள்ள நாடுகளுக்குப் பயணம் செய்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். முக்கியமாகக் கர்ப்பிணிப் பெண்களும் தாயாக விரும்பும் பெண்களும் இந்த நாடுகளுக்குச் செல்லாது இருப்பது நல்லது என்றும் சொல்லப்படுகிறது. அப்படிச் செல்லும் போது, இவர்களுக்கு இந்த வைரஸ் தொற்றுமானால், தொற்று ஏற்பட்ட பெண்கள் மட்டும் அல்ல அவர்கள் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகளுக்கும் இது பேராபத்தை ஏற்படுத்தும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சீக்கா வைரசிற்கு இன்னமும் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கனடியர்களுக்கு அதிக ஆபத்து இல்லாவிட்டாலும் நம் உறவுகளும் நண்பர்களும் வாழும் நாடுகளில் இந்த வைரஸ் குறித்த விழிப்புணர்வை நாம் ஏற்படுத்த வேண்டியது நம் கடமையாகும்.

– நிலா. கோ. துரைரத்தினம்





கனடா மூர்த்தி எழுதும்

நினைத்துப் பார்க்கிறேன்

செந்தில் வினுவின் Waiting for Summer திரைப்படம்

இளம் இயக்குனர் செந்தில் வினு தான் எடுத்திருக்கும் Waiting for Summer என்ற ஆங்கிலப் படத்தை சென்ற வாரம் யோர்க் சினிமாவில் திரையிட்டார். அவரது அழைப்பின்பேரில் நாம் பலரும் சென்றிருந்தோம். அதுகுறித்து நினைத்துப் பார்க்கிறேன். பொதுவாகவே அழைப்பின் பேரில் திரையிடப்படும் பல படங்கள் குறித்த 'பேரனுபவத்துடன்' தியேட்டருக்கு செல்லும் நமக்கு இம்முறை கிடைத்தது இன்ப அதிர்ச்சி. படம் குறித்த விமர்சனங்கள், பல கேள்விகள் மனதில் எழுந்தாலும் ஒட்டுமொத்தமாக 'அட.. நல்லாத்தான் செய்திருக்கிறார் செந்தில் வினு' என்று வியப்புடன் கலந்த ஆச்சரியம் உருவாகி தியேட்டரை விட்டு வெளியே வந்தோம். "அடுத்த படம் கட்டாயம் செய்யுங்கள்" என்று அனைவரும் வேண்டிக் கொள்ளும் அளவிற்கு படம் இருந்தது! (இந்தப் படத்தை பார்க்காதவர்களுக்கு படத்தை ஒரு முறை பார்த்தபின் இதைப் படியுங்கள் என்று மட்டும் சொல்லிவிட்டு.... கதையைப் பார்ப்போம்.

ஸாச் (Zach) என்ற பெயர் கொண்ட இளைஞன்... அவனது இளம் பிராயம் இன்பமயமாக இருந்திருக்கவில்லை. தன் சிறுவயதுக் காலத்திலேயே அவனது தாய் அவள் ஒரு நடிகையும்கூட மீளமுடியாத குடிப்பழக்கத்திற்கு ஆளாகிவிட்டவள். தாயிடம் இருந்து அந்நியப்பட்டவனாக



இருக்கின்ற ஸாச் இப்போது ரொறன்ரோவில் தனியே வாழ்ந்து வருகிறான் தன் தாயை வெறுக்கின்றவனாகத்தான் இருக்கிறான்.

ஷன்ரல் (Chantal) பெயர் கொண்ட யுவதி.. இவளது சிறுவயதுப் பிராயமும் குடும்பப் பிரிவுகளால் தனிமைப்படுத்தப்பட்டது. திருமண ஆலோசகராக வேலை பார்க்கும் அவள், ஒரு கட்டத்தில் தம்மைப் பிரிந்து போன தந்தையைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என ஆவலுறுகிறாள். இசைக் கலைஞரான தன் தந்தையை தேடி மொன்ரியாலில் இருந்து ரொறன்ரோ வருகிறாள்.

தன் தாயை வெறுத்து, வெறுப்பைக் கக்கும் அவனும், தன் தாயைப் பிரிந்துசென்றுவிட்ட தந்தையை பாசத்துடன் தேடும் இவளும் சந்திக்கிறார்கள். இவர்களுக்கிடையே முளைவிடும் மெல்லிய காதல்.. அந்தக் காதல்தான் படத்தின் கதை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்க அந்தக்காதலுக்குப் பின்னால் இருவரது பெற்றோரைக் குறித்தும் படம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அழுத்தமாக விரிகிறது. 'நம்ப முடியாது' என நாம் நினைக்கும் வகையில் சில சம்பவங்களும், மனதைத் தொடும் அற்புதமான இழைகளும் கூடவே உண்டு.

படம் நகரும்போதே அதில் இயல்பும், மிகைப்படுதலும் மாறி மாறிக் கலந்திருக்கிறதோ என்ற குழப்பம் வராமலில்லை. இந்நிலையில் 'எதைஏற்பது எதைத்தவிர்ப்பது' என்ற கேள்வி எழவிடாமல் படத்தை நகர்த்தி ஒரு அழகான கிளைமாக்ஸ் வைத்து படத்தை முடித்ததுதான் இயக்குனராக செந்தில் வினு செய்த சாதனை. உதாரணத்திற்கு ஹீரோவும், ஹீரோயினும் பக்கத்துப் பக்கத்து அறைகளில்தான் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் வாழ்ந்து வந்திருக்கிறார்கள், Henry Stenfold என்ற இசைக் கலைஞரின் போஸ்டரை ஒட்டிவைத்து ரசிக்கும் அளவிற்கு ஹீரோயின் இருக்க, ஹீரோ அதே இசைக்கலைஞரை பூட்டிய கதவுக்கு இந்தப்புறம் நின்று அடிக்கடி பேசுகிறான். இப்படியாகத் திரைக்கதையில் வரும் முடிச்சுக்கள் பல கொஞ்சம் 'சினிமாத்தனமாக' இருக்கிறதே என்று மனதில் தோன்றினாலும், 'அதுதான் படைப்பாளி சொல்ல நினைத்த கதை' என்று அமைதியடைய வேண்டி இருக்கிறது. (இன்னும் பல குழப்பங்களுக்கான விளக்கங்களை திரையரங்கில் வைத்தே விளக்கி எம்மை ஓரளவு சமாதானப்படுத்தி விட்டார் செந்தில் வினு என்பதால் அவை குறித்து இனிப் பேசவேண்டியதில்லை.)

ரொறன்ரோவின் Street Carகள் ஓடுவதாகட்டும், சீன எழுத்துகளோடு பின்னிக் கலந்த China Townனின் பரபரப்பாகட்டும், ரொறன்ரோவின் வானைத் தொடும் CN Tower, Ferry ride, கொண்டோமேனியம் வீடு, Coffee Shopகள், Barகள் என நாம் அன்றாடம் பார்க்கும் அதே இடங்கள்தான்... ஆனால் அவற்றைப் படத்தில் காணும்போது ஒரு பரவசம் ஏற்படுகிறது. (பரவசம் காணாததை கண்டதால் வருவதில்லை. கண்டதைக் காணும்போதும் வரும்.) பூட்டியிருக்கும் கதவிற்கு மறுபுறத்தில் நோய்வாய்ப்பட்டு வாழ்வின் இறுதிக்கட்டத்துடன் மரணத்தை எதிர்பார்த்து புலம்பிக்கொண்டிருக்கும் முதியவர்தான் Henry Stenfold என்பது அந்தக் கரெக்டரின் குரலால் மட்டும் உணர்த்தப்படுகிறது. கதாநாயகனுடன் அந்த காரெக்டர் செய்யும் சம்பாசனை ஒருவித வலியுடனான தவிப்பை அவனுக்கு மட்டும் தரவில்லை. நமக்கும்தான்.

கனடாவில் குடும்ப வாழ்வு எதிர்கொள்ளும் பல படிப்பினைகளையும் செந்தில் வினு கதம்பமாகத் தருகிறார். 'ஒரு குடும்பம் மகிழ்ச்சிகரமாக வாழ்வது' என்பது பெற்றோர் சேர்ந்து சேர்ந்து வாழ்வதால் மட்டும் ஏற்படுவிவதில்லை. பெற்றோர் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்வதும் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காகத்தான் என்பதை Paul Cartierரின் வாழ்க்கை சொல்கிறது. வசனம்: "Some people you can care by being on their side... And some it is better with the distance..." தந்தையை தம்முடன் வருமாறு ஷன்ரல் கெஞ்சும் இடம் அவ்வளவு அழகாக பதிவாகி இருந்தது. அதேபோல், தாயின் காதலனை ஸாச் திருப்பி அனுப்புவது, கடைசியில் ஸாச் தாயைத் தேடிப் போவது எல்லாமே 'மனித மனம் ஒரு குரங்கு' என்பதை காட்டுகிறது. இப்படியாக அழுத்தமான காட்சிகளைக் கொண்டதொரு தமிழ்ப்படம் கனடாவில் வருமாக இருந்தால் அதுவே கனடாத்தமிழ் திரைப்பட உலகில் ஒரு மறுமலர்ச்சி என வைத்துக் கொண்டாடப்படலாம். ஹூம்... தமிழர் ஒருவர் அதை ஆங்கிலத் திரையில் காட்டியிருக்கிறார். தமிழராக நாம் ஏன் இதையே செய்யவில்லை என்ற கேள்வி பெருமூச்சுடன் எழுகிறது.

இயக்குனர் 'தான் ஒரு இந்தியர்' என்பதை பார்வையாளர்களுக்கு சொல்வதற்காகத்தான் இறுதிக் காட்சியை ஒரு முத்தாய்ப்பாக வைத்திருப்பாரோ என்ற சந்தேகம் கதாநாயகன் ஸாச், 'தான் இந்தியா செல்லப்போவதாக' சொல்லும்போது மனதில் தோன்றுகிறது. நாயகனின் 'இந்தியாவிற்கான தேடல் எதற்கு?' என்பதை Justify பண்ணும் அழுத்தமான காட்சிகளோ விளக்கங்களோ படத்தில் போதாது என்றே எனக்குத் தோன்றுகிறது. (எங்கோ ஓரிடத்தில் வெறும் வசனத்தில் அதற்கான விளக்கம் சொல்லப்படுகிறதுதான். ஆனாலும் அவை மேலோட்டமான வரிகள்தான்.) இருந்தபோதும், கடைசியில் எதுவுமே நடக்காததுபோல "தான் இந்தியா செல்ல முடிவு செய்துவிட்டதை" அவன் சொல்லும்போது, அவள் அதை மௌனமாக ஏற்றுக் கொள்வது அழகான கவிதையாகத் தெரிகிறது. (இந்த இடத்தில், 'இந்தியா' என்பதற்குப் பதிலாக 'தமிழ் அடையாளத்தை'க் காட்டுவதாக அந்த முடிவு இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே என எனது 'தமிழ்ப்புத்தி' அந்த இடத்தில் ஓலமிட்டதையும் மறைப்பதற்கில்லை. ஹலோ டைரக்டர் செந்தில் வினு ஸார், தமிழர்களில் ஒருவரான உங்களின் படைப்பு இவ்வளவு சிரமத்துடன் அற்புதமாக உருவாக்கப்பட்டு வெளி வரும்போது ஓஸ்கார் வாங்கும்போது ஏ.ஆர். ரஹ்மான் தமிழில் பேசியதுபோல அந்தப் படைப்பே நம் தமிழ் அடையாளத்தையும் பார்வையாளர் மனதில் பதிய வைக்க வேண்டாமோ? உங்க 'இந்தியா'வா? அல்லது நம்ம தமிழா?)

எல்லாவற்றையும்விட இந்தப் படத்தில் என்னை உலுக்கிய விடயம் ஒன்றே ஒன்றுதான். அது மயானத்தில் நடக்கும் அந்தக் கடைசிக் காட்சி. மரணித்துப் போய்விட்ட ஒரு இசைக்கலைஞனின் சவ அடக்கத்தை அவனது ரசிகர்கள் துள்ளிசை பாடி, மகிழ்ச்சிக் கொண்டாட்டம்போல செய்கிறார்கள். 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ மாநிலத்தீர் வேண்டா; நமக்கும் அது வழியே நாம்போம் அளவும் எமக்கு என் என்று இட்டு உண்டு இரும் " என்ற ஔவையார் வரிகளைப் புரிந்தவன், "சென்றதினி மீளாது மூடரே, நீர் எப்போதும் சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா; இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்" என்ற பாரதி வரிகளைப் புரிந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள். கடைசி கிளைமாக்ஸ் காட்சிக்கான மூலம் ஔவயாரிடம், பாரதியிடம் இருந்தே வாங்கப்பட்டிருக்கிறது... தமிழேன்டா..

அடுத்தது எப்போ பாஸ்?



திருமணத்தை தள்ளிவைக்கும் நடிகைகள்

சினிமா பணம் கொழிக்கும் தொழில். அதனால்தான் பல நடிகைகள் திருமணத்தையே தள்ளிவைத்து நடித்துக் கொண்டிருக்கிறார்கள். திருமணம் செய்யும்படி குடும்பம், காதலர்கள் வற்புறுத்தியும் நடிகைகள் திருமணத்தை தள்ளிவைப்பதன் காரணம் பணம். சினிமாவில் கிடைக்கும் புகழ் இன்னொரு காரணம். எங்கு சென்றாலும் புகழ் வெளிச்சம் விழும். அது இல்லாமல் இருப்பது மிக சிரமம். இதனால்தான் வயது ஏறினாலும் திருமணத்தை தள்ளிவைத்துக்கொண்டிருக்கிறார்கள் நடிகைகள். அனுஷ்காவிற்கு 34 வயதாகிறது. த்ரிஷாவிற்கு 33 வயதாகிறது. நயன்தாராவிற்கு 31 வயதாகிறது. காஜலுக்கும் இதே வயதுதான். ஆனால் இவர்களிற்கு உடனடியாக திருணம் செய்யும் உத்தேசமில்லை. காஜல் இரண்டு வருடத்தின் பின்னர்தான் திருமணம் என அறிவித்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

இதையெல்லாம் பார்ப்பாராம்!

ஆஷ்னா சவேரியென்றால் உடனடியாக நினைவிற்கு வராது. சந்தானத்தின் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ஹீரோயின். பணம்தான் குறியென எல்லா படத்தையும் இழுத்துப்போடும் நாயகிகள் மத்தியில் நான் வித்தியாசமானவள் என்கிறார் இவர். ஒரு படத்தை தேர்வு செய்வதில் ஏராளம் விதிமுறைகளை பார்க்கிறார். கதை பிடிக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனை. நிறையப்படம் நடிப்பது முக்கியமல்ல, பெயர் சொல்லும் படம் வேண்டும் என தத்துவம் வேறு பேசுகிறார். அதுதவிர, தயாரிப்பாளர், இயக்குனர் யாரென்றும் பார்ப்பேன் என்றுள்ளார். இவ்வளவும் சரியாக அமைந்தால்தான் படத்தை தேர்வு செய்வாராம்.

தாராளமயமாகும் அஞ்சலி!

நல்ல நடிகையென பெயர் வாங்கிக்கொண்டிருந்த சமயத்தில் சித்தியுடன் சச்சரவுப்பட்டு வீட்டைவிட்டு ஓடி தலைமறைவானார் அஞ்சலி. இதன்மூலம் சினிமா வாய்ப்பையும் சேதமாக்கிக் கொண்டார். ஆந்திரா பக்கம் போய் தெலுங்குப்படங்களில் நடித்தார். பின்னர் தமிழுக்கு வந்து சூர்யா படத்தில் கவர்சி நடனம் ஆடினார். அதன்பின் நடித்த சகலகலாவல்லி, இறைவி படங்களில் குடும்பபாங்காக நடித்தார். அதன்பிறகு ஒப்பந்தமான படங்களிலும் குடும்பகுத்துவிளக்குத்தான். ஆனால் இந்தப்படங்கள் இன்னும் வெளியாகவில்லை. இதற்குள் அஞ்சலி வேறு முடிவெடுத்துள்ளார். இனி கலகலப்பான கவர்ச்சி பெண்ணாக நடிக்கவுள்ளாராம்.

சமந்தா மாறினாரா?

சமந்தா, நாகசைதன்யா காதல் ஊரறிந்தது. அடுத்த வருடம் இருவரும் திருமணம் செய்யவுள்ளனர். புதிய படங்களில் ஒப்பந்தமாகவதையும் சமந்தா தவிர்த்து வருகிறார். கிறிஸ்தவரான சமந்தா, இந்துவான நாகசைதன்யாவை திருமணம் செய்வதும் இப்போது பரபரப்பை தோற்றுவித்துள்ளது. யார் மதம் மாறுவார்கள்? மதம் மாறாமலேயே திருமணம் செய்வார்களா? என்ற சர்ச்சைகள் நீடித்துவந்த நிலையில், சமந்தா இந்துவாக மதம் மாறிவிட்டார் என்ற தகவல் இணையத்தில் பரவியது. அது பற்றிய புகைப்படங்களும் பரவின. இந்த தகவலை நாகசைதன்யா மறுத்துள்ளார். இருவரும் அவரவர் மதத்தை பின்பற்றியபடியே வாழவுள்ளதாக கூறியுள்ளார்.


To support Harvard Tamil Ch
Hosted by Canadian
Agni Proudly Present
NAVA LAW
PROFESSIONAL CORPORATION
agni MUSICAL SHOW
EST 1991
COMPUTEK
COLLE
Sunday Oct 16 2016
6:30 pm
Thamil Isai Kalaa Manram
1120 Tapscott Rd, Unit 3,4 & 5
Scarborough. ON M1X 1E8
கூடிய விளக்கங்களுக்கு அழையுங்கள்:
416 707 9104 / 647-220-5555 / 416 240 0078
TC
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 5



என்னை பெற்றோர் புரிந்துகொள்ள வில்லையென்றபோது ஆரம்பத்தில் கோபமும், வேதனையும் இருந்தது. இப்போது இல்லை. இந்த சமூகம் எப்படியானது, அவர்கள் என்னவிதமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுவிட்டேன். பதினெட்டு வயது முடிவதற்குள் எனக்கு உலகம் கற்றுத்தந்தது அனேகம்.

ஒருதிருநங்கையாகஇந்தவாழ்க்கையையும், சூழலையும் பாதுகாப்பற்றதாகவே நான் உணர்ந்து கொண்டிருந்தேன். இதில் எழுதுவதைவிடசிரமமானது அந்தவாழ்க்கை. சில வலிகளிற்கும் அவமானங்களிற்கும் நிகரான வார்த்தைகள் கிடையாது. அந்த வலிகளையும், அவமானங்களையும் வார்த்தைகளில் சொல்ல முடியாது. அதிகமேன், நடந்த முடிந்தபின்னர் மீண்டுமொருமுறை முழுமையாக நினைவுகொள்ளவும் முடியாது. அவ்வளவு கனதி, கொடூரமானது.

அப்படியான கனத்த அனுபவங்கைள நான் தினமும் சந்தித்து கொண்டிருந்த பருவம். உலகத்தின் முன் திருநங்கையாக நான் காலடியெடுத்து வைத்த காலம். அவமானங்கள், கேலிகள், வசைகளை எதிர்கொள்ளத் தொடங்கியிருந்தேன்.

ஓவ்வொரு வசைச்சொல்லை உதிர்க்கும் உதடுகளையும், கேலி பேசும் வாய்களையும் மிக நன்றாகவே மனது பதிந்து வைத்திருந்தது. அதனால்சிலரை பார்த்தாலே வேறுதிசையில் சென்றுவிடுவேன்.

எங்கள் வீட்டுக்கருகில், வீதியில், சுற்றயலில் இருந்த எண்ணற்ற முகங்கள் அசிங்க முகங்களாக மனதில் பதிந்துவிட்டது. அவர்களை எதிர்ப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நான் காயப்படுத்தப்படுவேன்.

இப்படியான சிலர் மிக அசிங்கமாக என்னைகேலிசெய்துபடிபின்னாலேயேசுற்றுவார்கள். பாலியல் உறவிற்கு அழைப்பார்கள். இதில் எங்கள் கிராமத்தை சேர்ந்த இருவர் முக்கியமானவர்கள்.

அப்பொழுது நான் என்னளவில் மாற்றத்தை உணர்ந்து கொண்டிருந்த சமயம். தோற்றத்திலல்லாமல் செயற்பாட்டில் பெண்மை வெளிப்பட்ட காலம் அது. ஒருநாள் நான் தனிமையில் சென்று கொண்டிருக்க, பின்னால் வந்து பாலியல் உறவிற்கு அழைத்தார்கள். நான் அவர்களை தவிர்த்துவிட்டு, விரைவாக சென்றுவிட்டேன்.

மறுநாள், நல்லூரடியில் சென்றுகொண்டிருந்தேன். ஆள்நடமாட்டம் குறைவான நேரம். இருவரும் சைக்கிளில் வந்து மறித்தார்கள். தங்களுடன் வரச்சொன்னார்னள். நான் அவர்களை தவிர்த்து வேகமாக செல்ல முயல, கையை பிடித்து இழுத்தார்கள். உதறிவிட்டு ஓடினேன். ஆனால் அவர்கள் என்னை பிடித்துவிட்டனர். சைக்கிளின் முன்பக்கத்தில் என்னை இருத்திக் கொண்டு சென்றார்கள். பாடசாலையொன்றிற்கு முன்பாக உள்ள பற்றைக்குள் கொண்டு சென்று, என் கை,கால், வாயை கட்டி அவர்கள் குரூர எண்ணத்தை செயற்படுத்தினார்கள்.

விடயம் முடிய அவர்கள் தப்பியோடிவிட்டனர். நான் வீட்டுக்கு சென்று நடந்ததை சொன்னேன். பின்னர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சையளிக்கப்பட்டேன். மறுநாள் யாழ்ப்பாண பத்திரிகை, இணையங்கள் பரபரப்பு செய்தி வெளியிட்டன. எல்லா ஊடகங்களும் பாதிக்கப்பட்ட நான் யார் என்பதை துப்பறிந்து, என்னை நெருங்கவே முயன்றன. வைத்திய சாலை, சட்டபாதுகாப்பு இருந்தபடியால் தப்பித்தேன். இல்லையென்றால், என் சிறுபராயத்திலேயே ஊடகங்கள் என்னை கொன்றிருக்கும். என் படம் கிடைத்திருந்தால் நிச்சயம், படத்துடன் செய்தி பிரசுரித்திருப்பார்கள். அவர்கள் யாருக்கும் இந்த அசிங்கத்தை செய்தவர்கள் யார் என்பதிலோ, அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதிலோ துளியும் ஆர்வம் கிடையாது.

என்னுடன் அத்துமீறி நடந்தவன் ஒருவனிற்கு எச்.ஐ.வி தொற்றுள்ளதென்ற அதிர்ச்சி தகவல் பின்னர்தான் தெரியவந்தது. மருத்துவமனையில் எனக்கு தொடர்சிகிச்சை, பரிசோதனை நடத்தப்பட்டது. நல்ல வேளையாக, அப்படியொரு அபாயத்தில் சிக்கவில்லை. இப்பொழுது மகிழ்ச்சியாக இரத்ததானமும் செய்கிறேன்.

யாழில் பாலியல் தொழிலாளிகள் இருக்கிறார்கள். உலகத்தின் எல்லா மூலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். திருநங்கைகளும் பாலியல் தொழிலாளிகளாக உள்ளனர். ஏன், யாழ்ப்பாணத்தில்கூட அப்படியிருக்கிறார்கள். ஆனால், பெண்களையே பாலியல் பிண்டங்களாகவும், திருநங்கைகள் என்றாலே பாலியல் தொழிலாளிகள்தான் என்பதை போலவும் சமூகம் தவறாக கருதுகிறது. தென்னிந்திய சினிமாவில் திருநங்கைகள் என்றால் பாலியல் தொழில் செய்பவர்கள், கேலிக்குரியவர்கள் என்பதை போன்ற சித்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் வீட்டிலும், சமூகத்திலும் சவால்களை சந்திக்க இதுதான் பிரதான காரணம். திருநங்கைகளும் மனிதர்களே, பால்நிலை வேறுபாட்டால் அவர்களை கேலிக்குரியவர்களாகபார்ப்பதுதவறென்பது நமது சமூகத்தில் சொல்லிக்கொடுக்கப் படவில்லை. அதனால்த்தான் ஒவ்வொரு திருநங்கையும் வீட்டிலும், சமூகத்திலும் சிக்கல்களை சந்திக்கிறார்கள்.

நான் எனது வீட்டில், பெற்றோர்களுடன் வசிப்பதில்லை. எனது வீட்டில், பெற்றோர்களால் இழைக்கப்பட்ட கொடுமையிலிருந்து காவல்த்துறைதான் காப்பாற்றியது. அவர்களின் பார்வையில்நான் வேண்டாதபிள்ளை. நான் இருப்பதை அவமான சின்னமாக கருதினார்கள். நான் செத்துப்போவதையே விரும்பினார்கள். தினம்தினம் அடித்தார்கள், சித்திரவதை செய்தார்கள், வார்த்தைகளால் கொன்றார்கள். இனிதாங்கவே முடியாதென்ற போது காவலநிலையத்திற்குதான் ஓடினேன். அவர்கள்தான் பெற்றோரை அழைத்து கண்டித்து, ஆலொசனை சொல்லி அனுப்புவார்கள்.

என்னை பெற்றோர் புரிந்துகொள்ள வில்லையென்றபோது ஆரம்பத்தில் கோபமும், வேதனையும் இருந்தது. இப்போது இல்லை. இந்த சமூகம் எப்படியானது, அவர்கள் என்னவிதமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுவிட்டேன். பதினெட்டு வயது முடிவதற்குள் எனக்கு உலகம் கற்றுத்தந்தது அனேகம். இந்த சமூகத்தின் ஒரு அங்கம்தான் எனது குடும்பமும். இந்த சமூகம் எப்படி உருவாக்கப்பட்டதோ, அப்படித்தான் அவர்களும் உருவாக்கப்பட்டனர். இந்த சமூக அமைப்பு மாறும்வரை குடும்பத்தில், வீட்டில் மாற்றம் வருமென எதிர்பார்க்க முடியாது.

அதனால் யார் மீதும் இப்போது கோபம் கிடையாது. தொடரும்...

– மோனிஷா

10-ம் பக்க தொடர்ச்சி

அரசாக இலங்கை அரசு இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயினும், மாகாண அரசு தன்னை ஒரு சைவ/இந்து அரசாக வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் நிலவவே செய்கின்றன. இவர்களது அரசியற் திட்ட வரைபில், முஸ்லிம் மக்கள் தொடர்பாக வரும் பகுதிகளில் அவர்களை ஒரு சமூகம் என்றும் அவர்கள் உரிமைகளை சமூக உரிமைகள் என்றும் எழுதப்பட்டிருக்கும் விதம் விவாதத்துக்குயது. (இதை முஸ்லிம் அறிஞர்கள் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார்கள்) அரசியல் ரீதியாக தனியானதும் தனித்துவமானதுமான ஒரு இனமாக அவர்களை வரயறை செய்யாதது, இன்றைய நிலையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் தற்செயலானதாக கருதப்படுவது சாத்தியமில்லை.

அடுத்தது, தமிழ் மக்கள் தமது தனித்துவத்தைப் பேணுவதற்கும்,தமக்கான சுயாட்சிக்கான அதிகார அலகைப் பெற்றுக் கொள்வதற்கும், வரலாற்று உணர்ச்சிகளைக் கொட்டி நிருபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது. ஒரு இனம் பல்வேறு வரலாற்றுக் காரணக்களுக்காக, தான் தன்னுடய தனித்துவத்தை பேணி வாழ்வதற்கான தேவையை உணர்வதும், அதையே அது தனக்குப் பாதுகப்பாக உணர்வதும், அப்படி வாழும் ஆற்றலும் வளமும் தனக்கு இருப்பதாக நம்புதும் மட்டுமே, அவ்வாறு கோர போதுமானது. அதற்கு நூற்றாண்டுகால வரலாறுகள் எல்லாம் தேவையில்லை. இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டால் மட்டுமே, பேரவையால் ,மலையக, முஸ்லிம் தேசங்கள் போன்ற விடயங்களையும், அவற்றின் உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடியும். வரலாற்றில் இலங்கைக்கு யார் முதல் வந்தவர் யார் பிந்தி வந்தவர் என்பதைக் கூறி அரசியல் உரிமையை கோருவது, ஒருவகை இனவாதக் கண்ணோட்டமாகவே மற்ற இன மக்களால் புரிந்து கொள்ளப்படும். அந்த உணர்வு, மற்ற இனங்களின் உரிமைகளை மதிக்காத தன்மையை ஏற்படுத்தும். வரலாறு இல்லாதவர்களுக்கு தமது தனித்துவத்தை பேண உரிமை இல்லை என்ற வாதத்துக்கும் இது இட்டுச் செல்லும். இன்னொரு பக்கத்தில், இன்று சிங்களப் பெரும்பான்மையிடம் இருக்கும் சிந்தனி இதுவே. இதற்காகவே அவர்கள் வரலாற்றை திரிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். பேரவையின் அரசியல் திட்டத்தில் இருக்கும் இந்த விடயம் அதன் அடிப்படையான நோக்கத்துக்கு, தமிழ் மக்களின் நோக்கத்துக்கு குந்தகமானதாகும்.. இது விவாதிக்கப்பட்டு திருத்திக்கொள்ளப்பட வேண்டும். திருத்தப்பட்ட அடிப்படையிலேயே பேரவை மக்களை திரட்ட வேண்டும்.

இத்தகைய தெளிவற்ற சிந்தனகள் இருக்கும் போது, தமிழ் மக்களின் உரிமையை வெறும் உணர்ச்சியூட்டும் விடயமாகப் பார்க்கும் தமிழ் இனவாத கருத்துப்போக்கு உள்ளவர்களும்,உணர்ச்சி அரசியலில் ஆர்வமுள்ளவர்களும் பேரவையில் இணைந்துகொள்ள அவை வாய்ப்பளிக்கும். பொங்குதமிழ், பிரபாகரன், வீரத்தமிழன் போன்ற ஊணர்வூட்டும் பேச்சுகளை பேசி மக்களை அணிதிரட்டும் பணியில் அவர்கள் ஈடுபடுவார்கள். ஆனல் இவ்வாறான செயல்கள், அரசியல் விழிப்புள்ள மக்களை அல்ல, கும்பல்களையே சேர்க்கும். இது ஆபத்தான ஒரு போக்கு. தமிழ் மக்களுக்கோ, அவர்களது நியாயமான போராட்டத்துக்கோ இது எந்த நலனையும் செய்யப்போவதில்லை. மாறாக ஒருசிலர் தேர்தலில் வெல்லுவதற்கு சில வேளைகளில் இது உதவலாம். தேர்தல் அரசியலில் இறங்கப்போவதில்லை என்று தெரிவிக்கும். பேரவை போன்ற ஒரு சமூக அமைப்புக்கும், தமது விடுதலைக்காக குரலெழுப்பும் மக்களுக்கும் அவை பாதகமாகவே முடியும்!

எழுக தமிழுக்கு எதிராக எழுந்த குரல்களை நியாயப்படுத்த அடிப்படையான காரணக்கள் இவை தான். ஒரு நியாயமான போராட்டம் இனவாதப் போராட்டமாக முத்திரை குத்தப்படவோ, அடையாளம் காணப்படவோ கூடாது. அது அனைத்துமக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். உணர்ச்சி கும்பலைச் சேர்க்கும்; நியாயமான போராட்டம் தான் மக்களைத் திரட்டும். பேரவை அதை நோக்கி மாறவேண்டும். அல்லது அது மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போக அதிக காலம் எடுக்காது!





“எந்தப் படமானாலும் அதை இலாபம் தரக்கூடிய வகையில் தயாரிக்க முடியும்!”

என்கிறார் ‘Waiting for Summer’ திரைப்படத்தின் தயாரிப்பாளர், இயக்குனர் செந்தில் வினு

‘Waiting for Summer’ திரைப்படத்தின் தயாரிப்பாளர், இயக்குனர் செந்தில் வினு அவர்கள் தீபத்திற்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி இது. 2012ம் ஆண்டு CanadianFilmFestÞ™ வெளியான 'Waiting for Summer' திரைப்படம் Film North - Huntsville International Film Festivalஇல் '2012 Film North Best Feature Award' என்ற விருதைப் பெற்றது. தமிழகத்திலிருந்து வந்த செந்தில் வினு தற்போது ரொறொன்ரோவில் வசித்து வருகிறார். இந்தப் பேட்டியின்போது ஒரு டைரக்டராக,தயாரிப்பாளராகசெந்தில்வினு சொன்ன பல ஆங்கில வார்த்தைகளையும், டெக்னிக்கல் சமாச்சாரங்களையும் வடிகட்டிக் குறைத்துத்தான் பேட்டியைத் தந்திருக்கிறேன். Waiting for Summer படத்தை 2016 அக்டோபர் 21 அன்று மீண்டும் யோர்க் சினிமாவில் திரையிடப்போகிறார் செந்தில் வினு என்பது போனஸ் செய்தி. கனடா மூர்த்தி

கேள்வி: உங்கள் 'Waiting for Summer' படம் 2012இல் முதன்முதலாக திரையிடப் பட்டது. நான்கு வருடங்கள் கழித்து இந்த வாரம்தான் 'தமிழ் மக்களுக்காக' இதைத் திரையிட்டீர்கள். ஏன் இந்தத் தாமதம்?

செந்தில் வினு: இந்த ஆங்கில மொழிப் படத்தை எடுத்த பின் எனது மற்றைய படத் தயாரிப்பு திட்டங்களைக் கவனித்ததுதான் இந்தத் தாமதத்திற்குக் காரணம்! 2012ல் படம் திரையிடப்பட்டதிலிருந்து வேறு பணிகள் தொடர்ச்சியாக வந்து கொண்டேயிருந்தன. அடுத்ததாக நான் ஈடுபடவிருக்கும் படங்களிற்கான ஸ்க்ரிப்ட் வேலைகளுக்கு நேரம் ஒதுக்க வேண்டியிருந்தது. மற்றைய பல தயாரிப்பாளர்களின் படங்களுக்கு ஆலோசகராக பணியாற்ற வேண்டியிருந்தது. தனிநாயகம் அடிகளாரைக் குறித்த ஆவணப்படம்ஒன்றை கனேடியத் தமிழர் பேரவைக்காக இயக்கித் தர வேண்டியிருந்தது. இப்படி இன்னும் பல. இந்த வேலைப்பளுவின் மத்தியில் இந்தப் படத்தை திரையிடுவதற்கு நான் பலமுறை நினைத்தும் சந்தர்ப்பம் ஏனோ தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது. இப்போது அடுத்து வரப்போகும் வேலைகளில் பிஸியாகுமுன்னர் கொஞ்சம் ரிலாக்ஸ்ட்டாக இருக்கிறேன். இந்த இடைவெளிக் காலத்தை பயன்படுத்தித்தான் இப்போது படத்தை திரையிட்டோம். உண்மையில் என் தமிழ் மக்களோடு என் படைப்பைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்ற சிறிய நெருடல் என் மனதில் இந்த நான்கு வருடங்களும் தொடர்ந்து இருந்து கொண்டேதான் இருந்தது. மேலும் சமீபத்தில் நடந்த 'தமிழர் தெருவிழா'வில் எனது அங்காடிக்கு வந்த பலரும் இப்படம் குறித்துக் கேள்வியுற்று அதிசயித்துப் போய் படத்தை பார்க்க ஆவலும் தெரிவித்தனர். அதுவும் இப்போது



இதைத் திரையிட இன்னுமொரு காரணம்.

கேள்வி: என்னைப் பொறுத்தவரை இந்தப்படத்திற்குஊடகத்துறையில்இருந்து மட்டுமே குறிப்பிட்டவர்கள் அழைக் கப்பட்டிருந்தார்கள். அப்படி வந்தவர்கள் சினிமாவுடன் ஏதோ ஒருவகையில் நெருக்க மானவர்கள். அவர்களின் ஏகோபித்த பாராட்டுக்களை உங்கள் படம் பெற்றுக் கொண்டது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

செந்தில் வினு: (குறுக்கிடுகிறார்) ஆம். நன்றி. ஆனால் திரையிட்டதன் மூலம் ரொறன்ரோவின் தமிழ் ஊடகவியாலளர்கள் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறேன். ரொறன்ரோவில் வாழும் ஒரு தமிழனால் ஒரு ஆங்கிலப்படத்தை வெற்றிகரமாகத் தயாரிக்க முடியும் என்பதை பலரும் கவனித்தார்கள். இந்த படத்தை தமிழ் ஆடியன்ஸ் பார்ப்பார்களா? இந்த படம் எடுக்கப்பட்டிருக்கும் முறை, கதை சொல்லப்பட்டிருக்கும் பாணி என்பன தமிழ் சமூகத்திற்கு உவப்பானதாக இருக்குமா என்ற கேள்விகளும் இந்தத் திரையிடலுக்கு முன்னர் இருந்தது. அதைக்குறித்த புரிதலும் இந்த திரையிடல் மூலம் ஏற்பட்டது.

கேள்வி: ஆனால் சினிமாத்துறையில் ஆர்வம் கொண்ட பலரை நீங்கள் அழைக்க வில்லை என்று பலரும் குறைப்பட்டிருக் கிறார்கள். உங்களால் அழைக்கப்படாதவர்களுக்கு என்ன சொல்கிறீர்கள்?

செந்தில் வினு: அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன். ஒரு ஊடக சந்திப்பு எனும் அளவில்தான் இந்த திரையிடல் இருந்தது. அழைக்கப்பட்ட பலரும் எனக்கு நன்கு தெரிந்தவர்களே... இந்த திரையிடல் குறித்த முகப்புத்தகப் பகிர்வுகளை பார்த்த பலரும் தங்களை ஏன் அழைக்கவில்லையே என உரிமையுடன் கோபம் கொண்டு எனக்கு உள்பெட்டித் தகவல் அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திரையிடுதல் ஊடகவியலாளர்களுக்காக என ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்பின் மற்றவர்களுக்கான திரையிடுதலை 2016 அக்டோபர் 21 யோர்க் சினிமாவில் ஏற்பாடு செய்திருக்கிறேன்.அவை ஒருபுறமிருக்க, நண்பர்களில் பலரும் இப்படத்தை எம்மவரின் இரண்டாம் தலைமுறையினர் ரசித்துப் பார்ப்பார்கள் எனவும் இப்போது சொல்கிறார்கள். ஆகவே மற்ற எல்லாரையும் ஆகஸ்ட் 21 ந் திகதி அன்புடன் அழைக் கிறேன்.

கேள்வி: அவசியம் திரையிடுங்கள்... இப்படியாக ஆங்கிலப் படம் எடுப்பது வியாபார ரீதியில் ஒரு இலாபகரமான முயற்சியா? இன்னும் நேரடியாகவே கேட்டால் ஆங்கிலப் படம் ஒன்றை நீங்கள் எடுத்தது ஆர்வம் காரணமாகவா அல்லது பணம் பண்ணவா?

செந்தில் வினு: சினிமா எடுப்பது மற்றை வியாபரங்களில் இருந்து கொஞ்சம் மாறுபடக் கூடியது. ஆர்வமில்லாமல் இதை யாரும் செய்ய முடியாது. அதேபோல பணம் வரவேண்டும் என்றுதான் தயாரிப்பாளர் நினைப்பார். எந்தப் படமானாலும் அதை இலாபம் தரக்கூடிய வகையில் தயாரிக்க முடியும் என நம்புபவன் நான். அப்படியே என் திட்டங்களையும் அமைக்கிறேன். இலாபம் வரும் என்று தெரிந்தால் மட்டுமே அந்தப்படங்களை தயாரிககவோ அல்லது டைரக்ட் செய்யவோ முனைவேன்.

கேள்வி: தயாரிப்பாளர் பணத்தை இழக்கவில்லை என்பது மகிழ்ச்சியான செய்தி. அதன் ரகசியம் என்ன?

செந்தில் வினு: ரகசியமா? அப்படி எதுவுமில்லை. எந்தப்படத்திற்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதை கணிப்பது ஒரு தனிக் கலை. அதை கரெக்டாகப் பண்ண வேண்டும். மூன்று மில்லியனிலேயே முடிக்கக் கூடிய ஒரு படத்தை ஐந்து மில்லியனுக்கான பட்ஜெட் போடக்கூடாது. நீங்கள் எந்தக் கதையை படமாக எடுக்க நினைகிறீர்களோ அந்தக் கதையை எப்படி படமாக்கினால் செலவை கட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதை முதலில் கவனிக்க வேண்டும். எடுக்கப்படும் படத்திற்கு ஏற்ற முறைகளால் விநியோகத் திட்டங்களை வகுக்க வேண்டும். இவை ஒன்றும் பெரும் ரகசியமும் அல்ல. எல்லாருக்கும் தெரிந்த விடயம்தான். கனடாவில் ஒரு படத்தை வியாபாரம் செய்து பணத்தை மீளப்பெறுவதற்கு பல வழிகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு Video on Demand, Pay Cable, Streaming on Demand, (iTune, Amazon) என பல முறைகளால் உங்கள் படத்தை விற்று பணம் பண்ணலாம். உள்ளூர் சந்தையில் வியாபரம் பண்ணலாம். அதேபோல வெளிநாட்டுகளிலும் மார்க்கட் பண்ணலாம்.

கேள்வி: வெளிநாடுகள் என்று எதைச் சொல்கிறீர்கள்?

செந்தில் வினு: கனடா திரைப்பட உலகைப் பொறுத்தவரை பல வெளிநாட்டு வியாபாரச் சந்தைகள் உள்ளன. ஆங்கிலம் பேசும் நாடுகளின் சந்தை, லத்தின் மொழிச் சந்தை, சீன மொழிக்கான சந்தை, ஜப்பானின் சந்தை, தென் ஆசியாவின் சந்தை, தென்கிழக்கு ஆசியாவின் சந்தை என பல சந்தைகளுக்கும் உங்கள் படம் வியாபாரமாகலாம்.

கேள்வி: படவிழாக்களுக்கு அனுப்பி இலாபம் பெற முடியுமா?

செந்தில் வினு: பொதுவாக படவிழாக் களில் உங்கள் படத்தை திரையிடுவது நல்லதொரு அங்கீகாரத்தை படத்திற்கு நிச்சயம் தரும். படத்தை பெரிய அளவில் பிரபலப்படுத்தவும் அது உதவு

கிறது. இவை மட்டும்தான் படவிழாக்களினால் வரும் இலாபம் என்பதும் இல்லை. ஒவ்வொரு படவிழாவிற்குப் பின்னாலும் ஒரு வியாபாரச் சந்தையும் உள்ளது. உதாரணத்திற்கு பிரான்ஸின் கான் பெஸ்ரிவலை எடுத்தீர்களானால் அங்கு திரையிடப்படும் படங்களை வாங்குவதிற்கு ஒரு பெரும் ஆர்வலர் கூட்டமே இருக்கிறது. சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பட விநியோகஸ்தர்கள் அந்த விழாவிற்கு வருவார்கள். படவிழாவில் திரையிடப்படும் உங்கள் படம் வியாபாரத்திற்கு ஏற்றதாக அமையும்பட்சத்தில் நீங்கள் கலந்து கொள்ளும் படவிழாவே உங்கள் படத்தை வெற்றிகரமாக விற்க உதவி செய்வதும் உண்டு.

கேள்வி: புரிகிறது. உங்கள் Waiting for Summer படத்தை எப்படி வியாபரம் செய்தீர்கள்?

இரண்டு பட முயற்சிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேள்வி: கொஞ்சம் பொறுங்கள்... மூன்று ஆங்கிலப் படங்கள்... இரண்டு தமிழ்ப் படங்கள்... இந்த ஐந்து படங்களிலும் எந்தப் படத்தில் தற்போது உங்கள் கவனம் இருக்கிறது? எதை முதலில் தரப் போகிறீர்கள்?

செந்தில் வினு: (சிரிக்கிறார்) இந்த ஐந்து படங்களுக்காகவம் நான் ஏற்கனவே உழைத்துவிட்டேன். பலவருடங்கள் இந்த ஐந்து படங்களுக்காகவும் செலவு செய்தாயிற்று. எனது ஸ்கிரிப்ட் ரைட்டரும் நானும் கடுமையாக உழைத்து, முற்றுமுழுதாக திரைக்கதை முதல்கொண்டு வியாபர வழிமுறைகள்வரை அனைத்தும்திட்டமிடப்பட்டும் விட்டது. அடுந்த நிலைக்கு ஐந்துமே தயார். அதே சமயம் no success without the right team!





செந்தில் வினு: இந்தப் படம் எந்த வகைளான பார்வையாளர்ளை ஈர்க்கும் என்பதை எமது மார்கெட்டிங் குழு முதலில் ஆராய்ந்தது. Waiting for Summer படம் அர்த்தமுள்ள படங்களைப் பார்ப்பவர்களைத்தான் பெருமளவில் கவரும் என்றே முடிவு கிட்டியது. அப்படிப்பட்டவர்களுக்கான படங்களைக்கொள்முதல்செய்யும் பல விநியோகஸ்தர்களை அணுகினோம்.இந்தப்படத்தைகனேடியப்படங்களை வட அமெரிக்காவில் விநியோகிக்கும் Atlas Grove என்ற வியாபார வாங்கிக் கொண்டது. Super Channel, Rogers Video on Demand போன்றவை அவர்களிடம் இருந்தே படத்தைத் திரையிடும் உரிமையைப் பெற்றுக் கொண்டன. வட அமெரிக்க தியேட்டர் ரிலீஸூக்கான உரிமையை மட்டும் நான் வைத்துக் கொண்டேன். இது போலஇன்னும்சிலவிநியோகநிறுவனங்களோடும் எமது மார்கெட்டிங் குழு இணைந்து கொண்டது.

கேள்வி: வேறு படங்கள் எடுக்கும் திட்டம் உண்டா?

செந்தில்வினு: உண்டு.அடுத்தமூன்று படங்களுக்கான தயாரிப்பு வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. 'Carnal', 'Happy Birtday Anna', 'Zombie Guru' என மூன்று மூன்று வகையான படங்களின் வேலைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மூன்று படங்களும் மூன்று வகையான படங்கள். அந்தந்த வகைக்குரிய மார்க்கெட்களை மனதில் வைத்து அவற்றிற்கான திரைக்கதைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கேள்வி: தமிழ் படம் தயாரிக்கும் எண்ணம் இல்லையா?

செந்தில் வினு: இல்லாமலா...?! நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், விநியோகஸ்தர்கள் பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் என்பன இப்போது நடக்கின்றன. ஐந்தில் எது முந்திக் கொள்ளும் என்பதை கூடிய விரைவில் அறியத் தருவேன்.

கேள்வி: கனடாவில் நம்மவர்களில் பலரும்திரைப்படத்துறையில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களை உங்கள் பயணத்தில் இணைத்துக் கொள்வீர்களா?

செந்தில் வினு: நிச்சயமாக... ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். கிரியேட்டிவ் ஆர்வம் வேறு.. தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவது வேறு. படத்தயாரிப்பு என்பது மிகவும் செலவு மிக்க விடயம். ஆர்வம் கொள்வது வேறு, வேலை செய்து முடிப்பது வேறு... திரைப்பட உருவாக்கப் பயணத்தில் உண்மையான ஆர்வம் உள்ளவர்கள் மட்டும்தான் படத்தயாரிப்புக் குழுக்களில் இணைய முடியும். ஒரு வகையில் படத்தயாரிப்பு என்பது இராணுவ போர் முறை போல இருக்கும். குறுகிய நேரத்தில் கடுமையான வேலை செய்ய வேண்டியிருக்கும். பெரும் அழுத்தம் நிறைந்த பணி இது. அழுத்தங்களை ஏற்க முடிந்தவர்கள்தான் தயாரிப்புக்களோடு ஒத்து ஓட முடியும். சமீபத்தில் நடந்த 'தமிழ்த் தெரு விழா'வின்போது எனது படத் தயாரிப்பு கூடாரத்திற்கு பலரும் வந்து பதிவு செய்து போனார்கள். அவர்களில் சிலர் என் தயாரிப்புப் பயணத்தில் இணையக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு படத் தயாரிப்பு சம்பந்தமான ஆலோசனைகள் தர என்றும் ஆர்வமாயிருக்கிறேன்.



குழந்தைப் போராளி

"உனக்கு ஒரு குடும்பமுண்டு, அதனால் நீ உன்னுடைய வீட்டிற்குத் திரும்புவது தான் நல்லதென நாங்களிருவருமே நினைக்கின்றோம்." வீடு திரும்புவது பற்றி நான் பேசவே விரும்பவில்லை. "எனக்குச் சம்பளமே வேண்டாம், வேலைக்கு வைத்துக்கொள்கிறீர்களா?" எனக் கேட்டேன். ஆனால் அவரோ "நீ மனவுறுதி கொண்டவளாக இருக்கவேண்டும், அடி உதைகளுக்கு நீ பயப்படக்கூடாது, அது மட்டுமல்லாது நீ உனது சிற்றன்னையிடம் தோற்றுவிடக்கூடாது, நீ தொடர்ந்து படிக்க வேண்டும், உன்னை என் வீட்டில் வைத்துக்கொண்டால் அது எந்த வகையிலும் நான் உனக்கு உதவுவதாக இருக்காது, நீ உன் குடும்பத்தைப் பிரிந்து தனியாக நிற்பதில் எனக்குச் சம்மதமில்லை." எனச் சொல்லி முடித்தார்.

நான் இங்கு இருப்பது சாத்தியமில்லை என எனக்குத் தெளிவாகவே விளங்கிவிட்டது. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நான் அந்தப் பெண்ணின் முன்னே நின்றேன். ஓர் அதிசயம் நடந்து அவரென்னை இங்கேயே தங்கிவிடச் சொல்லமாட்டாரா எனத் தவித்தேன்.என்னிடம்எனது ஆடைகளையும் பொருட்களையும் வைத்திருக்கும் ஒரு பையாவது இருந்திருந்தால் நான் உடுப்புக்களை அடுக்கும் சாட்டிலாவது சிறிது தாமதித்திருக்கலாம். இப்போதோ நான் உடனடியாகவே புறப்பட வேண்டியிருந்தது. நான் இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருப்பதற்கான உபாயங்களைத் தேடத் தொடங்கினேன். பாத்திரங்களைக் கழுவி வீட்டைச் சுத்தம் செய்வதாக அவரிடம் கூறினேன்.

"கட்டாயமல்ல, அதைச் செய்வதில் உனக்கு மகிழ்ச்சியென்றால் செய்யலாம்" எனச் சொன்னார். உடனடியாக வேலையைத் தொடங்கினேன். என் எண்ணங்களை ஒழுங்குபடுத்த வேலை உதவியது. வேலைகளை முடித்துக்கொண்டு நான் புறப்படும் போது அவர் எனக்குக் கொஞ்சப் பணம் தந்து "இது உனக்கு ஏதேனுமொரு வகையில் உதவலாம், கவனமாகப் போ!" எனச் சொன்னார். என் தொண்டையிலிருந்து எந்தச் சொல்லுமே வெளியே வரவில்லை. மௌனமாக அங்கிருந்து வெளியேறினேன்.

எங்கு செல்வதென்று எனக்குத் தெரியவில்லை. எங்களது வீடிருந்த பகுதிக்கு எனது கால்கள் தாமாகவே வந்த போது வழியிலே எனது சகோதரர்களைக் கண்டேன். அவர்கள் என்னை கண்டதால் தங்களுக்கு மகிழ்ச்சி என்றுதான் காட்டிக் கொண்டார்கள். அது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. காலை உணவின் போது நான் அவர்களுக்குப் பரிமாறுவேன். நானில்லாததால் அவர்களுக்கு அந்தப் பணிவிடை கிட்டியிருக்காது. அதனாலேயே நான் திரும்பி வந்ததால் அவர்கள் மகிழ்கிறார்களோ? நான் எடுத்த எடுப்பிலேயே "அப்பா என் மீது கோபமாக இருக்கிறாரா?" என அவர்களிடம் கேட்டேன். "இல்லை... அவர் உனக்கு அடிக்க மாட்டார்." எனச் சொன்னார்கள். அவர்கள் என்னை பயப்படவேண்டாமெனச் சொன்னாலும் என்னால் அதை நம்ப முடியாதிருந்தது. அவர்கள் என்னை வீட்டிற்கு கூட்டிச் செல்வதில் ஆர்வமாக இருந்தபடியால் என்னை வீட்டிற்கு அழைத்து வரச் சொல்லி அவர்களிடம் அப்பா உத்தரவிட்டிருப்பாரோ என நினைத்துப் பார்த்தேன். ஒரு தம்பி தான் வீட்டிற்குச் சென்று சிற்றன்னையிடம் பிரச்சனையின்றி நான் வீட்டிற்கு வரலாமா எனக் கேட்டு வருவதாகச் சொன்னான். போன வேகத்திலேயே அவன் திரும்பி வந்தது எனக்குச் சந்தேகத்தினை வரவழைத்தது. ஆனாலும் எனக்கு வேறு வழியேது? நான் ஒரு பிச்சைக்காரியைப் போன்றவள். இரக்கத்தை யாசித்து நிற்பவள்.

சிற்றன்னை அமைதியாகவே காணப்பட்டார். எனது விளக்கங்கள், முக்கியமாக மன்றாட்டங்கள் அவருக்குத் திருப்தியளித்திருக்க வேண்டும். தான் அப்பாவைச் சமாதானப்படுத்துவதாக என்னிடம் சொன்னார். சிற்றன்னை குத்தி முறியாதபடியால் அவரை நான் நம்பினேன். அப்பா மதியத்திற்குப் பின் வீட்டிற்கு வருவதாயிருந்தது. நான் அவரின் கேள்விகளுக்காக என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். ஒரு தகப்பனாக நான் திரும்பி வந்ததற்காக அவர் சந்தோசப்பட்டு வீட்டில் என்னை இருக்க அனுமதிக்கலாமென நினத்துக் கொண்டேன். ஆனால் இந்த நம்பிக்கை பொய்த்துப் போயிற்று. அப்பா வந்ததும் வராததுமாக மூர்க்கத்துடன் ஒரு சடப் பொருளைக் கையாளுவது போல என்னைத்தூக்கித்தரையில் அடித்தார். எந்தக் கேள்வியும் என்னிடம் கேட்கப்படவில்லை. எந்த விளக்கமும் அளிக்க எனக்கு அவகாசம் தரப்படவில்லை. எல்லாமே மிக விரைவாக நடந்தேறியது. எனக்கு மீண்டும் சுய நினைவு வந்தபோது எனது முகத்தில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நான் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தேன். நான் இருள்வெளியிற் கிடந்தேன். என் மனமும் இருண்டு கிடந்தது.

தொடரும்...

கடந்த பதினைந்து இதழ்களாக தொடர்ந்த இந்த பகுதியின் இறுதிப்பகுதி இது. நமது சமூகத்தில் பெண்களின் நிலை என்ன? சமூக அசைவியக்கத்தில் பெண்களின் பாத்திரம் என்ன? ஒரு பெண் தன்னை முழுமையாக வெளிக்காட்டிக்கொள்ளவும், பாதுகாப்பாக உணரவும் சமூக உருவாக்கத்தில் வாய்ப்புள்ளதா? ஒரு ஆண் எடுத்துக்கொள்ளும் சுதந்திரங்களை பெண்ணிற்கும் சமூகம் வழங்குகிறதா?

கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் உருவானவையெல்லாம் பெண்களை கட்டியிருக்கும் நுண்ணிய வலைகளா? ஆண்களின் விருப்பு, எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நடக்கும் பெண்களைத்தான் சமூக நடைமுறைகள் பாதுகாக்கிறதா? ஆண்களின் உலகத்திற்குள் நுழையாத பெண்களிற்கு சமூகத்தின் நீதிமுறை இரக்கமே காட்டாதா?

இப்படி பல கேள்விகளை இந்த தொடர் முழுவதும் எழுப்பி, அது பற்றி பேசியிருந்தோம். பெண்கள் ஏன் விழிப்படைய வேண்டும், எவற்றிலெல்லாம் விழிப்படைய வேண்டும், பொதுப்பார்வையில் எவ்வாறான மாற்றங்களை கோர வேண்டுமென்றெல்லாம் பேசினோம்.

எனினும், எழுதுவதை... பேசுவதை... படிப்பதை நடைமுறையாக்கும் போதுள்ள சிக்கல் பெரியது. அதிக விலை கொடுக்க வேண்டும். ஆனால், நமது சுயத்தை அறிந்து கொள்ளும்போது இந்த சவால்களை இலகுவாக கடக்க முடியும்.

கடந்தவாரம், ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தின் புறநகரொன்றை சேர்ந்த ஒரு பெண். நிதி நிறுவனமொன்றில் பணிபுரிகிறார். அவர் சட்டத்தின் உதவியை நாடினார். எல்லா பெண்களும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் சந்திக்கும் சிக்கல்தான். நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பெண்களை எப்படியெல்லாம் அச்சப்படுத்துகிறது, தொழில்நுட்ப சாதனங்கள் பெண்களை பாதுகாப்பாக உணர வைக்கவில்லையென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த சிக்கலில் சிக்குப்படும் பெண்களில் மிகப்பெரும்பாலானவர்கள் சரணடைந்துவிடுகிறார்கள். மிகச்சிலர்தான் துணிந்து எதிர்கொள்கிறார்கள்.

பெண்ணெழுத்து 16



இந்த யுவதியின் வீட்டின் பக்கமாகமுள்ள கிணற்றடியின் ஒருபக்க மறைப்பு அயல்வீட்டுக்காரர்களின் சுவர். அந்த வீட்டில் சில வாலிபர்கள் உள்ளனர். அந்த வீட்டில் சிசிரிவி கமரா பொருத்தியிருக்கிறார்கள். வீதியை இலக்காக வைப்பதாக கூறப்பட்டிருந்தாலும், அது பெரும்பாலும் இவர்களின் கிணற்றடியையே இலக்கு வைத்திருந்தது. காலையில் குளிக்க வந்தபோதுதான் யுவதி அதனை அவதானித்து, பொலிசில் முறையிட்டாள்.

தொழில்நுட்பத்தின் துணையோடோ, சமூக நடைமுறைகளின் துணையோடோ நடக்கும் தாக்குதல்களை பெண்கள் துணிந்து எதிர்கொள்ள வேண்டும்.

பெண்கள் தம்மை அறியவும், தமது உரிமைகளை தெரியவும் வைப்பது ஊடகங்களின் கடமை. அதனை நான் பயன்படுத்திக் கொண்டுள்ளேன் என்ற திருப்தி கடந்த வாரங்களை திரும்பிப் பார்க்கும்போது எஞ்சுகிறது. பெண்கள் தம்மை உணர்வதும், தமது உரிமைகளிற்காக குரல்கொடுப்பதும் ஆண்களிற்கெதிரான நடவடிக்கைகள் அல்ல. அப்படி சமூகத்தில் நிலவும் தவறான அபிப்பிராயங்களை போக்க வேண்டும். பெண்கள் தமது உரிமைகள் பற்றி பேச தயாரானால் ஆண்கள் வீட்டிலிருந்து சமைக்க வேண்டும் என்பதை போல கதைக்கும் சரியான புரிதலில்லாதவர்களை அன்பாக அணுகி, புரிய வைக்க வேண்டும். யாராவது ஒருவர் வீட்டிலிருந்து சமைக்க வேண்டுமென்ற எண்ணத்தை விட செய்யுங்கள். துணைகள் இருவருமே இணைந்து அனைத்து கடமைகளையும் செய்யலாம் சமையல் உட்பட.

பெண்கள் தம்மை அறியவும், தமது உரிமைகளை தெரியவும் வைப்பது ஊடகங்களின் கடமை. அதனை நான் பயன்படுத்திக் கொண்டுள்ளேன் என்ற திருப்தி கடந்த வாரங்களை திரும்பிப் பார்க்கும்போது எஞ்சுகிறது.

பெண் விடுதலையை பாடசாலையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பெண்பிள்ளைகளின் உரிமைகளை புரிய வைக்க வேண்டும். சவால்களை எப்படி சமாளிப்பதென்பதை கற்றுக்கொடுக்க வேண்டும். சட்டம் எப்படியான பாதுகாப்பை வழங்குகிறதென்ற அறிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சமூகநடைமுறையில், கலாசார கூறுகளில், தொழில்நுட்பத்தின் பெருக்கத்தில் பெணகள் எப்படியான வலைகளால் பின்னப்பட்டு, சிக்கவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற புரிதல் ஒவ்வொரு பெண்பிள்ளையும் சிறிய வயதிலேயே தெரிந்து வைத்திருக்கட்டும். அதுபோல, ஒவ்வொரு ஆண்குழந்தையும் தனது சகோதரியின் உரிமைகளை உணர வைக்கப்பட வேண்டும்.

சகோதரிகளின் உரிமைகளை அங்கீகரிக்க... பெண்களையும் சக உயிராக உணர்ந்து உரிமைகளை அங்கீகரிக்கும் உயர்ந்த மனித விழுமியத்தை கற்றுக்கொடுத்தால் தொழில்நுட்பம் உள்ளிட்ட சாத்தியங்களை பயன்படுத்தி பெண்களை வேட்டையாடும் வெறியை இல்லாமல் செய்யலாம்.

ஆனால், இது சாதாரண கடமை கிடையாது. பிற்போக்குதனங்களும், கலாசார நடைமுறையென்ற பெயரில் மூடத்தனங்களும் கற்றவர்கள் மத்தியில்த்தான் அதிகமுள்ளன. நமது கல்விக்கட்டமைப்பில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்தால்தான் பெண்விடுதலை செயற்திட்டத்தை முன்னெடுக்கலாம்.

ஆனால் முன்னரைவிட பெண்களின் உரிமைகள் பற்றிய உரையாடல்கள் அதிகரித்துள்ளது. அது தீவிரம் பெற்றால்த்தான் பெண்கள் ஓரளவு பாதுகாப்பான நிலையை அடையலாம். அதை நோக்கிய பயணத்தில் ஒரு சிறு பங்களிப்பாக இந்த தொடரையும் கருதுகிறேன்.

இந்த தொடர் வெளிவந்த நாட்களில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலுமுள்ள பெண்கள் பலர் தொடர்பு கொண்டார்கள். ஏதோ பேசாப்பொருளை பேசத் துணிந்ததைபோல பாராட்டி பேசினார்கள். எதையும் பேச தடையில்லை, ஒரு நுண்ணிய தடையே இருக்கிறது. அது உங்கள் மனங்களில் உள்ளது, அதை கடந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றேன்.

தொடரின் இந்த இறுதி அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருக்கும் இன்றைய நாளில் எதேச்சையாக ஒரு சந்திப்பு. பாடசாலை மாணவியொருவர் இந்த தொடரின் அனைத்து பகுதிகளையும் கத்தரித்து வைத்திருந்து, காட்டினார்.

தொடர் வெளிவந்த காலம் முழுக்க படித்து கருத்து சொன்னவர்கள், இந்த மாணவி போன்றவர்கள்தான் இறுதிப் பகுதியை எழுதிக் கொண்டிருக்கும்போது மனதில் நிற்கிறார்கள். சமூக அசைவியக்கத்தில் மெல்லிய அலைகளை உருவாக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம். அதற்கு இந்த தொடர் ஏதும் பங்களிப்பை வழங்கியிருந்தால் முழு நிறைவடைவேன்.

நன்றி.

– பி.சியா



Tickets Available @

Rouge Bakery
1145 Morningside Ave, Scarborough
(416) 283-0005
Kumar Video
5800 Sheppard Ave E, Scarborough
(416) 292-9043
Sami & Sons
1884 Kennedy Road, Scarborough
(416) 298-1598
Eraa CD
2625 Eglinton Ave E, Scarborough
(416) 269-1716
Elanthulir Video
3430 Finch Ave E, Scarborough
(416) 495-9155
Nantha Caters
3268 Finch Ave E, Scarborough
(416) 298-4222
Eraa CD
5930 Finch Ave E, Scarborough
(416) 988-1716
AirComPlus
GTA Square, 5215 Finch Ave E, Scarborough
(416) 266-6328

Murugan Book Stores
GTA Square, 5215 Finch Ave E, Scarborough
(416) 321-0285
Ashmitha Lotto Centre
GTA Square, 5215 Finch Ave E, Scarborough
(416) 298-0505
Suncity Supermarket
2761 Markham Road, Scarborough
(416) 724-6666
Cake Park
3341 Markham Road, Scarborough
(416) 321-2253
Spiceland CD
6065 Steeles Ave E, Scarborough
(416) 335-3030
Ayngaran Jewellery
2857 Lawrence Ave E, Scarborough
(416) 264-2572
SKT Jewellers & Textiles
2062 Lawrence Ave E, Scarborough
(416) 615-0197
New Ocean Supermarket
5635 Finch Ave E, Scarborough
(416) 573-3446

South Asian Super Market
9909 Markham Rd, Markham
(905) 201-9833
Nantha Caters
5010 Steeles Ave W, Etobicoke
(416) 749-3111
Uthayas Supermarket
5010 Steeles Ave W, Etobicoke
(416) 740-7971
Maple Groceries
9699 Jane St, Vaughan
(905) 417-6069
Asian Cash and Carry
8917 The Gore Rd, Brampton
(905) 794-0015
Durcaa Supermarket
86 Kennedy Rd S, Brampton
(905) 796-6762
Golumbia Video
144 Kennedy Rd S, Brampton
(905) 456-8433
Nantha Caters
4915 Steeles Ave E, Scarborough
(416) 299-6522

MONTREAL

AMR
1150 De carie, Montreal
(514) 334-6737

Bijouterie ARANI
121A – 6700 Cote-des-Neiges
(514) 737-0055

UCMAS west Island
108 – 3675 Boul-des Sources
(514) 566-0625

Marche A-1 Desi
118-780 Avenue Saint Charles
Vaudreuil – Dorion
(450) 218-3009

TORONTO OCT 8 SAT @5:30PM
SIR JOHN A. MACDONALD CI
2300 PHARMACY AVE, TORONTO, ON

MONTREAL OCT 9 SUN @6PM
VANIER COLLEGE
821 SAINTE-CROIX, SAINT LAURENT

416-451-8427 | 647-293-4629 | 416-500-9193 | 514-458-1333

குப்பிளான்
ஐ.சண்முகன்





ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 6

நண்பர் பேராசிரியர் யோகராசாவின் மணிவிழா நடந்து முடிந்திருக்கிறது. மட்டக்களப்பில் நடந்த நிகழ்வில் என்னையும் பேச அழைத்திருந் தார்கள். அந்த சமயத்தில் உடல்நலம் குன்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால், அதில் கலந்து கொள்ள முடியவில்லை.

1970 களின் தொடக்கத்தில் "சமூகதீபம்" சஞ்சிகையில் வந்த அவரது ஒரு கவிதையில் ஈடுபாடுகொண்டு நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். அப்போது எனக்கு அவருடன் நேரடியான பழக்கம் கிடையாது. நான் கொழும்பில் வேலை செய்த காலத்தில் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவராக இருந்தார். அப்போதுதான் நேரடியான பழக்கம் ஏற் பட்டது. அவ்வப்போது சந்தித்து ஈடுபாடுள்ள விடயங்களைப் பற்றி உரையாடுவோம்.

நான் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம், கல்முனை, என ஊடாடி மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்று வந்தேன். அப்போது மலைநாட்டில் ஆசிரியராக கடமை புரிந்த நண்பர் யோகராசாவும், இடமாற்றம் பெற்று ஊருக்கு வந்தார். அவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், நான் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், ஆசிரியராகக் கடமை புரிந்தோம். இக்காலத்தைப் பொற்காலம் என்றே சொல்வேன்.

தனது கற்பித்தற் செயற்பாடுகள் முடிய அனேகமாக ஒவ்வொரு முன்னிரவுப் பொழுதுகளிலும் அவர் எனது வீட்டிற்கு வருவார். பல விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடுவோம். பரஸ்பரம் ஒருவருக் கொருவர் ஆலோசனை வழங்குவோம். சில விடயங்களில் இடித்துரைப்போம். ஆசிரியர் அனுபவங்களைப் பற்றி, கையாள வேண்டிய உத்திகளைப் பற்றி எல்லாம் எங்களுக்குள் பேசித் தீர்மானித்துக் கொள்வோம்.

இதற்கும் மேலாக கிடைக்கின்ற புத்தகங்களை எங்களுக்குள் பரிமாறி வாசிப்போம். இலக்கியம் மட்டுமல்லாது போராட்டங்கள், பெரியார்களின் வரலாறும், நாடுகளின் எழுச்சி, வீழ்ச்சிகள் என எங்கள் வாசிப்பும் பரந்திருக்கும். அவை பற்றி மேலும் மேலும் தேடிக்கொண்டே இருப்போம். உண்மையில் ஏறத்தாழ பத்து வருடங்கள் எங்கள் வாழ்வின் அற்புதமான காலங்களாகும்.

இந்தக் காலத்தில் வாசித்த ஒரு புத்தகத்தைப் பற்றி நான் குறிப்பிட வேண்டும். அதை எங்கிருந்தோ நண்பர் யோகராசா தான் கொண்டு வந்தார். அமெரிக்காவில் வாழ்ந்த சுதேசிகளைப் பற்றிய, அவர்களது பழக்கவழக்கங்கள் பற்றிய, அவர்களது நாகரீகம் பற்றிய "ஆர்க்கண்ட் யாத்திரை" என்ற அந்தப் புத்தகம் ஒரு அற்புதமான புத்தகமாகும். எவ்வாறு குடியேறிகள் அந்த சுதேச மக்களை அழித்தொழித்தார்கள் என்பதை விபரமாகக் கூறுகின்ற புத்தகம் அதுவாகும்.

1990 இன் தொடக்கத்தில் யோகராசா மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றுவிட்டார். அங்கிருந்தும் பரஸ்பரம் கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளுவோம். அக்காலங்களில் இணையம், செல்போன் ஒன்றும் நடைமுறைக்கு வரவில்லை. கடிதங்களே உயிர்ப்புள்ள தொடர்பாடல் ஊடகங்களாக இருந்தன. அப்போதும் ஒரு கடிதத்தில் ஒரு புத்தகத்தைப் பற்றி நண்பர் எழுதிய வாக்கியம் எனக்கு இப்போதும் நினைவில் இருக்கின்றது. "ஏழு தலைமுறைகள்" என்ற புத்தகத்தைப் பற்றி, "இந்த புத்தகத்தை வாசிக்காதவன் மனிதன் என்று சொல்லத் தகுதியற்றவன்" என்று எழுதியிருந்தார். ஏழு தலைமுறையினர் என்ற நூல் எப்படி அமெரிக்கக் குடியேறிகள் ஆபிரிக்கக் கறுப்பின மக்களை ஆடுமாடுகளைப் போல அடிமைப்படுத்தி அமெரிக்காவிற்குக் கொண்டு வந்து குடியேற்றிய கதையைக் கூறும் நூலாகும்.

இதனைப் போலவே அழகிய பெரிய நாயகி அம்மா எழுதிய "கவலை" என்ற நூலைப்பற்றியும், கடிதத்தில் எழுதியிருந்தார். அந்த நூல் அக்காலப் பெண்களின் அடிமைத் தனத்தைப் பற்றிப் பேசுகின்ற நூலாகும்.

யோகராசாவும் நானும் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தோம். அவர் மறைந்த போது நேரடியாகச் சென்று அவருக்கு அஞ்சலி செய்ய முயன்றோம். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு அசம்பாவிதத்தால் எங்களால் அவ்வாறு செய்ய முடியாது போய்விட்டது. பண்டிதமணியின் மறைவிற்குப் பிறகு தனது முதுமாணிப்பட்ட ஆய்வுக்காக பண்டி தமணியின் வாழ்வையே தேர்ந்தெடுத்து முதுமாணிப்பட்டம் பெற்றார்.

இந்த முதுமாணிப்பட்டமே அவருக்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் நியமனத்தைப் பெற்றுக்கொடுத்தது. மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பக்காலங்களில் யோகராசா என்றால் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்றும், மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்றால் யோகராசா என்றும் பலரும் கூறும் விதத்தில் அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அத்தகைய சிறப்புக்கள் பொருந்திய யோகராசா ஒரு சமூக சீர்திருத்தவாதியு மாவார். தனது வாழ்க்கைத்துணையை மலைநாட்டிலேயே தேர்வு செய்திருந்தார். எடுத்த பணியை நிறைவு செய்வதில் அலுப்புசலிப்பில்லாதவர். ஒரு வகையில் அவரை உறங்காவிரதம் பூண்டவர் என நான் சொல்லுவதுண்டு. எத்தகைய பாரதூரமான விடயங்களையும் தனது நகைச்சுவை பாணியில் மேவிச் சொல்வார்.

அவர் தனது பணியில் இருந்து உத்தியோகரீதியாக ஓய்வு பெற்றிருந்தாலும் இயங்கிக் கொண்டே இருப்பார். மேலும் ஆய்வுகள் செய்து தன்னையும் தன் சார்ந்த சமூகத்தையும் மேன்மைப்படுத்துவார். அவர் தனது மனைவியுடனும், மகளுடனும் நிறைவான வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



எம்.ஜி.ஆருடன் பழனி ஜி.பெரியசாமி.

மென்மையான உள்ளம் கொண்டவர்!

எம்.ஜி.ஆர். தன்னால் ஒரு மனிதர் கூட வருத்தப்படக் கூடாது என்ற மென்மையான உள்ளம் கொண்டவர். தவிர்க்க இயலாத நிலையில், தன் நடவடிக்கையால் யாராவது பாதிக்கப்பட்டாலோ, மனம் புண்பட்டாலோ, உடனே அதற்கு பரிகாரம் தேடிய பிறகே அமைதி அடைவார் என்பதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. சிலம்புச் செல்வர் என்று அழைக்கப்பட்டவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ம.பொ.சி தொடர்பான சம்பவம் அதில் ஒன்று.

'மந்திரி குமாரி, 'மலைக்கள்ளன்', 'குலேபகா வலி', 'மதுரை வீரன்' போன்ற சூப்பர் ஹிட் படங்களில் நடித்து புகழ் பெற்று 1956ம் ஆண்டிலேயே எம்.ஜி.ஆர் தமிழ் திரையுலகின் உச்ச நட்சத்திரமாக திகழ்ந்தார். அந்த ஆண்டு ஜூன் 26ம் தேதி ம.பொ.சி.யின் பொன்விழாவை முன்னிட்டு சென்னையில் அவருக்கு நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்ள எம்.ஜி.ஆர் அழைக்கப்பட்டிருந்தார். விழாவில் எம்.ஜி.ஆர் பேசும்போது, ம.பொ.சி.யின் தமிழறிவை பாராட்டி, "தமிழை மழை போல் பொழியும் சிவஞானம்" என்று கூறவும்... கூட்டம் ஆர்ப்பரித்தது.

1986ம் ஆண்டு வரை தமிழகத்தில் மேல்சபை இருந்து வந்தது. சட்டசபைத் தேர்தலில் தோற்றவர்களை கொல்லைப்புற வழியாக பதவிக்குக் கொண்டு வரவே மேல்சபை பயன்படுகிறது என்று பொதுவாக ஒரு விமர்சனம் இருந்தது. இந்நிலையில், 1986ல் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது தமிழகத்தில் மேல்சபை கலைக்கப்பட்டது. அதுகுறித்து பல்வேறு சர்ச்சைகளும் வருத்தங்களும் நிலவின.

1984ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைவர் கருணாநிதி போட்டியிடவில்லை. அப்போது அவர் மேல்சபை உறுப்பினராக இருந் தார். அரசியல் காரணங்களுக்காக சபை கலைக்கப்பட்டதாகவும் பேச்சு உண்டு. ஆனால், அரசுக்கு தேவையில்லாத வீண் செலவு என்பதால் மேல்சபை கலைக்கப்பட்டதாக அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அரசுக்கு வீண் செலவு என்று கூறி ஆந்திராவிலும் மேல்சபை கலைக்கப்பட்டது. அங்கே அப்போது எதிர்ப்பு தெரிவித்த காங்கிரஸ், தமிழகத்தில் அதுதொடர்பான வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது.

காங்கிரஸில் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கிய ஜி.கே.மூப்பனார், "மேல்சபை கலைப்பை நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால், கூட்டணிக் கட்சியான அதிமுகவுக்கு சங்கடம் ஏற்படுத்த விரும்பவில்லை என்பதால் காங்கிரஸ் நடுநிலை வகித்தது" என்றார். பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுவதாக காங்கிரஸை திமுக குற்றம் சாட்டியது.

இந்த சர்ச்சைகளுக்கு நடுவே, மேல்சபை கலைக்கப்பட்டதில் மிகவும் வருத்தமடைந்தவர் ம.பொ.சி! அப்போது, மேல்சபைத் தலைவராக அவர்தான் இருந்து வந்தார். அரசின் முடிவை கடுமையாக எதிர்த்தார். முதல்வர் எம்.ஜி.ஆரை யும் விமர்சித்தார்.

எம்.ஜி.ஆரின் நண்பரான டாக்டர் பழனி ஜி.பெரியசாமி, ம.பொ.சி.க்கும் நெருக்கமானவர். அவரை அடிக்கடி சந்தித்துப் பேசுவார். அவர் ம.பொ.சியை சந்தித்தபோது, "மேல்சபை கலைப்பு முடிவுக்காக எதற்காக எம்.ஜி.ஆரை விமர்சிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

பொதுவாழ்வில் ம.பொ.சி. தூய்மையானவர். தனக்கென்று எந்த சொத்து சுகமும் சேர்க்காதவர். "மேல்சபைத் தலைவர் பதவி போய்விட்டால் மாதம்தோறும் எனக்கு கிடைக்கும் சம்பளமும் போய்விடும். எனக்கு இப்போது அரசாங்க கார் இருக்கிறது. அந்தக் காரும் இருக்காது. வயது முதிர்ந்த காலத்தில் வெளியே செல்ல வேண்டுமானால் என் பாடு திண்டாட்டம்" என்று பழனி பெரியசாமியிடம் கூறி ம.பொ.சி. வருத்தப் பட்டிருக்கிறார். ம.பொ.சி. யாரிடமும் எதுவும் கேட்டுப் பழகாதவர். எம்.ஜி.ஆர் வீட்டுக்கு சென்றால் அவரிடம் எதுவும் கேட்கக் கூடாது என்று தனது மகள் மாதவி பாஸ்கரனிடம் சொல்லி அனுப்புவாராம்.

ம.பொ.சி. தன்னிடம் வருத்தப்பட்ட அன்று இரவே எம்.ஜி.ஆரை பழனி பெரியசாமி சந்தித்தார். விஷயத்தைச் சொன்னார். எம்.ஜி.ஆர். "அப்படியா?" என்று கேட்டுக் கொண்டாரே தவிர, எதுவும் சொல்லவில்லை.

அந்த சமயத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு ம.பொ.சி. சென்றார். அங்கு, பழனி பெரியசாமியின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது, எம்.ஜி.ஆரிடமிருந்து தொலைபேசி அழைப்பு. போனை எடுத்த பழனி பெரியசாமியிடம் பேசிவிட்டு ம.பொ.சியிடம் கொடுக்கச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

ம.பொ.சியிடம் நலம் விசாரித்து விட்டு, அமெரிக்காவை நன்கு சுற்றிப் பார்க்கும்படியும் 'ஷாப்பிங்' சென்று தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளும்படியும் இதுகுறித்து பழனி பெரியசாமியிடம் சொல்லியிருப்பதாகவும் எம்.ஜி.ஆர். கூறினார்.

பின்னர், அமெரிக்காவில் இருந்து ம.பொ.சி. திரும்பிய பின் ஒருநாள், கோட்டையில் இருந்து வீட்டுக்கு காரில் புறப்பட்ட எம்.ஜி.ஆர், திடீரென ம.பொ.சியின் வீட்டுக்குச் சென்றார். முதல்வரின் எதிர்பாராத வருகையால் ம.பொ.சி. மகிழ்ச்சி அடைந்தார். அவரிடம் அமெரிக்க சுற்றுப் பயணம் பற்றி விசாரித்துவிட்டு புறப்படத் தயாரானார் எம்.ஜி.ஆர்.

ம.பொ.சியும் வழியனுப்ப எழுந்து கொள்ள, அவரின் கையில் ஒரு சாவியை எம்.ஜி.ஆர். திணித்தார். புரியாமல் பார்த்த ம.பொ.சியிடம், "இது கார் சாவி. உங்களுக்கு அரசாங்கம் கார் கொடுத்திருக்கிறது. மேல்சபை தலைவராக இருந்தபோது உங்களுக்கு வழங்கப்பட்ட மாதச் சம்பளமான ரூ.15,000 தொடர்ந்து கிடைக்கும். அந்த பதவியில் இருந்த எல்லா சலுகைகளும் வசதிகளும் உங்களுக்கு தொடரும். உங்களை தமிழ் வளர்ச்சித்துறை தலைவராக நியமித்திருக்கிறேன்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்க நின்றார் ம.பொ.சி.

சிலருக்குத்தான் சில பட்டங்கள் பொருத்தமாக அமையும். அப்படி எம்.ஜி.ஆருக்கு என்றே மிகப் பொருத்தமாக அமைந்தது, திருமுருக கிருபானந்த வாரியார் வழங்கிய பட்டமான 'பொன்மனச் செம்மல்.'

தொடரும்...


- ஸ்ரீதர் சுவாமிநாதன்



ம.பொ.சியின் பிறந்த நாள் விழா ஒன்றில் அவரை கவுரவிக்கிறார் எம்.ஜி.ஆர்.

உங்கள் குழந்தையும் விரல் சூப்புகின்றதா?

ஒரு தாய் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் போது அது இருவருக்குள்ளும் ஒரு நெருக்கத்தை உருவாக்குகிறது. இந்த நெருக்கமில்லாத குழந்தைகளே அதிகமாக விரல் சூப்பும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றன.



1. பொதுவாக விரல் சூப்பும் பழக்கம் இப்போது எல்லாக் குழந்தைகளிடமும் இருக்கிறது. மூன்று வயது வரை இந்தப் பழக்கத்தைத் தவறாக நினைக்க வேண்டியதில்லை. அந்த வயதிற்குப் பின்பும் இப்பழக்கம் நீடித்தால் ஒரு குழந்தைகள் நல சிறப்பு மருத்துவரிடம் காண்பித்து சிறப்பு சிகிச்சை அளிப்பது நல்லது.
2. குழந்தை விரல் சூப்புவதற்கு மிக முக்கியமான காரணமே தனக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று உணர்வதுதான் என்கிறார்கள்.
3. பெற்றோரிடம் தேவையான அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவை கிடைக்காத சூழலில்தான் குழந்தைகளிடம் விரல் சூப்பும் பழக்கம் நீடிக்கிறது. பெற்றோர்களிடம் நிரந்தர சண்டை இருந்தால் அவர்களின் குழந்தைகளிடம் விரல் சூப்பும் பழக்கம் உறுதியாக இருக்கும் என்கிறார்கள்.
4. குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு வழியில் மன அழுத்தம் ஏற்படும் போது அவை விரல் சூப்புவதைத்தான் விரும்புகிறது. சில குழந்தைகள் ஓய்வுக்காகவும், தூக்கம் நன்றாக வருவதற்காகவும், சில சமயம் பசிக்காகவும் கூட விரல்களைச் சூப்புகின்றன.

விரல் சூப்பும் பழக்கத்திலிருந்து விடுவிப்பது எப்படி?

1. விரல்களைச் சூப்பும் குழந்தைகளுக்கு அந்த விரல்களுக்கு ஏதாவது வேலை இருக்கும்படி ஓவியம் வரைதல், புத்தகங்களைப் படிக்க வைத்தல் போன்ற மாற்று வழிகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். இப்படி செய்வதால் குழந்தைகள் சிறிது சிறிதாக இப்பழக்கத்தை விட்டுவிடுவார்கள்.
2. சில குழந்தைகள் இரவில் தூக்கத்தின் போது கை சூப்பும். இந்நிலையில் பெற்றோர் விரல்களை எடுத்து விட வேண்டும். இதுபோல் தூங்கும் போது குழந்தைகளின் கையில் ஏதாவது ஒரு விளையாட்டுப் பொம்மையைக் கொடுத்தால், அந்தப் பொம்மையைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற கவனத்தில் விரல் சூப்பாமல் இருக்கும்.
3. விரல் சூப்பும் குழந்தைகளின் விரல்களில் வேப்பெண்ணெய் தடவுதல், பெண்டேஜ் போடுதல்போன்ற வன்முறையான செயல்களைத் தயவுசெய்து தவிர்த்துவிடுங்கள். இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இடைவெளியை அதிகரித்துவிடும்.
4. விரல் சூப்பும் பழக்கத்தை மாற்றுவதற்காக அந்த விரல்களில் சூடு போடுவது, குழந்தைகளை அடிப்பது போன்ற தவறான செயல்களில் ஈடுபடுவதை விட குழந்தைகள் மருத்துவரிடம் சிகிச்சை செய்வதே சிறந்தது.

வழுக்கையில் முடிவளர வீட்டிலேயே வைத்தியம்

வழுக்கைத் தலை பிரச்சினையில் பெண்களை விட ஆண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் ஆண்கள் பெண்களைப் போல் தங்கள் முடிக்கு போதிய பராமரிப்புக்களைக் கொடுப்பதில்லை.

உண்மையில் ஆண்களை விட பெண்கள் தான் அதிக முடி உதிர்தல் பிரச்சினைக்கு ஆளாகின்றனர். ஆனால் பெண்கள் முடி உதிர்தல் பிரச்சினை ஆரம்பித்த உடனேயே முடியை சரியாக பராமரிக்க ஆரம்பித்து விடுவதால் வழுக்கை தலை ஏற்படாமல் தப்பிக்கின்றனர்.

முடி உதிர்தலில் இருந்து தப்பிக்க சில வழிகள்.

எண்ணெய் மசாஜ்: அனைத்து ஆண்களும் முடி உதிர்தலைத் தடுக்க முதலில்செய்ய வேண்டியது வாரத்திற்கு இரண்டு முறை நீங்கள் பாவிக்கும் எண்ணெயை கொண்டு (தேங்காயெண்ணெய் ,நல்லெண்ணெய்) மசாஜ் செய்து ஊற வைத்து குளிப்பது தான். இதனால் முடிக்கு தேவையான சத்துக்கள் கிடைத்து முடி நன்கு ஆரோக்கியமானதாக இருக்கும்.

தேங்காய் பால்: தேங்காய் பால் முடியின் வளர்ச்சியை அதிகரிப்பதோடு முடியில் ஏற்படும் வறட்சியை தடுக்கும். எனவே தேங்காய்பாலை தலைக்கு தடவி ஊற வைத்து குளிக்க வேண்டும். குறிப்பாக இந்த முறையால் முடி நன்கு மென்மையாகும்.

கற்றாழை: முடி வலிமையோடு வளர வேண்டுமெனில் கற்றாழை ஜெல்லைக் கொண்டு தலையில் தடவி மசாஜ் செய்ய வேண்டும். அதிலும் இந்த முறையை வாரத்திற்கு இரண்டு முறை செய்து வந்தால் முடி உதிர் தல் குறைந்து முடிவேரில் ஏற்படும் பிரச்சனையை தடுக்கலாம்.

வேப்பிலை: வேப்பிலை அரைத்து தலையில் தடவி ஊற வைத்து குளித்தால் தலையில் உள்ள அல்கலைன் சீராக இருப்பதோடு பொடுகு மறைந்து முடி உதிர்தலும் நிறுத்தப்படும். மேலும் இந்த முறையை இன்னும் சிறப்பானதாக மாற்றுவதற்கு வேப்பிலை பேஸ்டுடன் தேன் மற்றும் ஒலிவ் ஓயிலை கலந்து தேய்க்கலாம்.

முட்டை: முடி பராமரிப்பில் முடிக்குபுரோட்டீன் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். முடி நன்கு வலுவோடும் அடர்த்தியாகவும் வளர வேண்டு மெனில் இந்த புரோட்டீன் சிகிச்சையை வாரத்திற்கு 3 4 முறை மேற் கொள்ள வேண்டும். அதற்கு செய்ய வேண்டியதெல்லாம் முட்டை உடைத்து பாத்திரத்தில் ஊற்றி நன்கு அடித்து ஈரப்பத முள்ள முடியில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் முடியை அலச வேண்டும்.

வெந்தயம்: 23 டேபிள் ஸ்பூன் வெந்தயத்தை நீரில் 810 மணி நேரம் ஊற வைத்து அரைத்து தலையில் தடவி ஊற வைத்து குளித்தால் முடி உதிர்வது குறைவது மட்டுமின்றி முடியின் வளர்ச்சியும் அதிகரித்து பொடுகுத் தொல்லையும் நீங்கும்.

DEEPAM .news
தீபம்
கனடாப் பதிப்பு
05.10.2016


அரசாங்கம் உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும்!

தேசிய சமாதான பேரவை தலைவர் ஜெஹான் பெரேரா

அரசாங்கம் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாது, அரசியல் தீர்வுமுயற்சிகளில் ஈடுபடுவது, அது முக்கியமானதென்றாலும், பயனற்ற ஒரு விளைவாகப் போகலாம் என்றும், அத்தகைய ஒரு தீர்வு கொலம்பியாவின் மக்களால் நிராகரிக்கப்பட்டது போலஇங்கும் மக்களால் நிராகரிக்கப்படலாம் என்றும் அண்மையில் தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா. அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான அறிவூட்டல்கூட்டங்களையும், கலந்துரையாடல்களையும் நடாத்திவரும் இவரது அந்தக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

'எழுக தமிழ் நிகழ்வு நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நான் யாழ்ப்பானம் போயிருந்தேன். நான், அரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக ஒரு அறிவூட்டல் கலந்துரையாடலை ஒழுங்கு செய்வது தொடர்பாக,யாழ் பல்கலைக் கழக துறைகளுக்கான பீடங்களின் உறுப்பினர்களை சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தேன். அவர்கள் இந்த எழுக தமிழ் நிகழ்வை ஒழுங்கு செய்வ்தில் உதவுவதில் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருந்தனர். நான் சிவில் சமூக உறுப்பினர்களை சந்திக்கவே இங்கு வந்திருந்தேன். ஆனால் அவர்களும் கூட இந்த வேலைகளுக்கு தீவிர ஆதரவாளர்களாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அவர்களில் ஒருவர் எனக்கு ஒரு வரைபடத்தைக் காட்டினார். அதில், பலாலிவிமான நிலையத்துக்குஅருகாமையில் இராணுவத்தால் எடுக்கப்பட்ட சில காணிகளைக் காட்டினார். அதன் பிறகு, அவர் என்னை அந்த இடத்துக்கு அதைக் காட்டுவதற்காகக் கூட்டிச் சென்றார். அந்த நிலங்கள், இராணுவத்தினரால் மக்களுக்கு திரும்ப கையளிக்கப்பட்ட நிலங்கள். ஆனால், விமான நிலையத்துக்கு நீண்ட தூரத்துக்கு அப்பால், இன்னமும் மிகப்பெரிய ஒரு இராணுவ முகாமும், அதற்கான விளையாட்டுத் திடலும், சில மரக்கறி மற்றும் பழமரங்களைக் கொண்ட தோட்டமும் இருந்தது. இராணுவத்தினர் இதுவிவசாயத் திணக்களத்துக்கு சொந்தமான நிலம் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குக் காட்டப்பட்ட வரைபடத்தில்,பெருமளவான குடிமனைகள் ஒரு காலத்தில் அவ்விடத்தில் இருந்திருப்பது காட்டப்பட்டுள்ளது. (வரைபடத்தை பார்க்க)





VALIKAMAM NORTH VASAVILAN EAST ODDAHAPULAM VILLAGE AREA MAP GS DIVISION J/244 (A)

எனக்கு என்ன விளங்கியதென்றால் அங்கு இருப்பவர்கள் தமிழர்களையோ சிங்களவர்களையோ எதிர்ப்பவர்கள் அல்ல. அவர்கள், தெற்கிலிருந்து அரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடலை செய்ய வந்துள்ள என்னுடன் சேர்ந்து கூட்டாக அதை செய்யத் துயாராகஇருந்தார்கள்.ஆனால்அதேவேளை, அவர்கள், தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய பல விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு நான் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள். இது புரிந்துகொள்ளப்பட வேண்டியது. வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் தான், இறுதிக்கட்ட யுத்தத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இவர்கள்,தமது உறவுகளை இழந்ததமது நிலங்களை இழந்த,தமது வாழ்வாதாரத்தை இழந்த,தமது அயலவர்களை இழந்த மக்கள். அவர்களால் பொறுமையுடன் காத்திருக்க முடியாது. அவர்கள் தமது பிரச்சினைகள் நேற்றுத் தீர்க்கப்படவில்லை என்றால், இப்போது தீர்க்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதே வேளை, யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்படாதவர்களுக்கு இத்தகைய அவசரம் இல்லை

வடக்கு கிழக்குக்கு வெளியிலுள்ள இவர்களால், 60 வருடப் பிரச்சினையை அவ்வளவு விரைவாக தீர்த்துவிட முடியாது என்பதை புரிந்து கொள்ள முடியும். அரசியல் தீர்வு காலமெடுக்கும் ஒரு விடயம் பல தலைவர்கள் முயன்றும் முடிக்க முடியாத ஒரு பிரச்சினையாக இருப்பது இது. அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வுக்கு வந்தடைய நீண்ட காலம் எடுக்கலாம். அதே வேளை தலைவர்கள் தமது தீர்வுக்காக மக்களைக் கல்வியூட்டுவதும் அவசியம். அப்போதுதான் ஒரு தீர்வு மக்களால் சர்வதேச வாக்கெடுப்பொன்றில் ஏற்றுக்கொள்ளப்படும். அண்மையில் கொலம்பியாவில், அரசாங்கத்துக்கும், ஃபார்க் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் நடந்த உடன்பாட்டு ஒப்பந்ததை, சர்வசன வாக்கெடுப்பில் மக்கள் நிராகரித்து விட்டார்கள். இந்த நிலை இலங்கையிலும் வரக்கூடும். ஆகவே அனைவரும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் தீர்வு பற்றிய உரையாடல்கள் அவசியம். இந்த நிலையை கொண்டுவர நீண்ட காலம் எடுக்கலாம். ஆனால் அதுவரை பாதிக்கப்பட்ட மக்களை காத்திருக்க வைக்க முடியாது.

ஆகவே இத்தகைய ஒரு நிலையில், அரசாங்கம் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம். நிலங்களை விடுவிப்பது, இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவது, வடக்குக் கிழக்கை இராணுவமயமாக்கியுள்ள நிலையை இல்லாமலாக்குவது, காணாமல் போனவர்களைக் கண்டடைவது என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். செய்யும் வேலைகளை துரிதமாகச் செய்ய வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில், நம்பிக்கையையும், நல்லுறவையும் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு அந்தக் கட்டுரை தெரிவிக்கிறது.